# ஈழமுரசு
அவுஸ்திரேலியா

முரசு : 01 முழக்கம் : 277 *25 September 2013* Vol : 01 Issue :277



கூட்டமைப்பின் வெற்றியைத் தடுக்க அரங்கேறிய கூத்துக்கள் 10,11

2014 மார்ச் தொடர் இலங்கைக்கு அக்கினிப்பரீட்சை 16

லிபரலின் ஆட்சியில் அகதிகள் கதி என்ன?



9



# போரினால் ரணம் செய்த சிங்களத்தை வாக்கினால் வதம் செய்த வடக்கு மக்கள்




RASANA
School of Aesthetic Arts
SATURDAY
19 OCTOBER 2013 6:30PM
at HURSTVILLE
ENTERTAINMENT CENTRE
16 Macmahon St, Hurstville
அடங்காப் பற்று
Excellent Jewellers
Major Sponsor
Choreographed by Seran Sribalan
All proceeds go to Patchwork
Assisting persons with disabilities, affected by war
Yarl Function Centre
Fashion Mart
Sri Ganesh Selections
Cabarita Family Dental Care
Kesiken's Flower Manavarai
TSS Worldwide Money Transfer
Professional Accountants Services
Selvatel Pty Ltd
Nithadigil Vision
Vim Tech Pty Ltd
Inbath Thamil Oli
KST Spice Corner
Thamilini Spice Shop
Dr Balan
Anjappar
Sun Video
Heart Care
World Link
Sun Takeaway
for Booking and further details: Dr. Balan 9746 3850
Seran 0452 224 205
Sribalan 0449 201 103

# நெருப்பாற்றை நீந்திக் கடக்குமா தமிழ்க் கூட்டமைப்பு?

பேரினவாதத்துக்கு சவுக்கடி கொடுத்திருக்கிறது வடக்கு மாகாண தேர்தல் திருவிழா. எது நடக்கக்கூடாது என்று சிங்கள அரசு பயந்ததோ கடைசியில் அது நடந்தேவிட்டது.

எல்லோரும் எதிர்பார்த்ததைப் போலவே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டி,மூன்றில் இரண்டு என்பதையும் தாண்டி ஐந்தில் நான்கு பெரும்மான்மையுடன் அரியாசனத்தை தனதாக்கிக்கொண்டுள்ளது. மாகாணசபையின் 38 ஆசனங்களில் மொத்தம் 30 ஆசனங்களை அலேக்காக கைப்பற்றி , சிங்களத்தின் வயிற்றில் கூட்டமைப்பு புளியைக் கரைத்துள்ளது.யாராலும் அசைக்க முடியாத ஆட்சியாளர் என்று மார்தட்டிக் கொள்ளும் மஹிந்தவின் அரசு கூட, தென்பகுதிகளில் பெற்றிராத வெற்றியொன்றை- 85 வீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றதன் மூலம்-கூட்டமைப்பு படைத்துள்ளது.

பரப்புரைக் காலத்தில் கூட்டமைப்பு எடுத்த முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றி என்று சொல்வதை விடவும் மக்களின் உள்மனக்கிடக்கைகளின் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே இந்த மகத்தான வெற்றியைக் கூட்டமைப்பு அடைந்துள்ளது என்று சொல்வதே பொருத்தமானது. அதுதான் உண்மையும் கூட. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட உடனேயே “வடக்கு கூட்டமைப்பின் வசம்” என்று எல்லோருமே கண்ணை மூடிக்கொண்டு ஆருடம் கூற முடிந்ததமைக்கு காரணம், தம் உரிமைக்குரலை வெளிப்படுத்துவதற்காக தமிழ்மக்கள் கூட்டமைப்புக்கே வாக்களிப்பர் என்ற அசைக்க முடியாத நம்பிக்கைதான். எந்தவொரு பரப்புரையும் செய்யாதிருந்தால் கூட வடக்கு மாகாணத்தைக் கூட்டமைப்பே கைப்பற்றியிருக்கும். ஆனால் இப்போது பெற்றுள்ளதைப் போன்று அதிகப்படியான ஆசனங்கள் சிலவற்றை இழக்கவேண்டியிருக்கும். ஆக மொத்தத்தில் தமது வெற்றியின் அளவினை அதிகரிக்கவே பரப்புரைக் களத்தில் கூட்டமைப்புக் குதிக்கவேண்டியிருந்ததே தவிர, வெற்றியை உறுதி செய்யவேண்டிய கட்டாயம் அதற்கிருக்கவில்லை.

இதனாலேயே அரச தரப்பு, தமது வேட்பாளர்கள் பற்றிய பரப்புரைகளை விடவும், கூட்டமைப்பு வேட்பாளர்கள் பற்றிய அவதூறுகளை அள்ளிவீசுவதிலேயே ஆர்வம் காட்டியிருந்தனர்.தனியே கூட்டமைப்பு என்ற கட்சியை மாத்திரம் இலக்கு வைக்காமல் தனிநபர் தாக்குதல்களாகவும் இவை அரங்கேறியிருந்தன. இந்தத்தனிநபர் தாக்குதல் கூட ஆரம்பத்தில் அறிக்கைகள், மேடைப்பேச்சுகள் என்பவற்றில் வசைபாடுவதில் தொடங்கி, அவர்களுக்கு எதிராக சுவரொட்டிகளை ஒட்டுதல், தனித்திருக்கும் அல்லது தனித்துச் செல்லும் தருணம் பார்த்து கூலிப்படைகளை வைத்து உடல்ரீதியான் பாதிப்புகளை ஏற்படுத்த முனைதல் என்று வளர்ச்சியடைந்து கொண்டே சென்றது. சயந்தன், அனந்தி போன்ற வேட்பாளர்கள் மீது இவ்வாறே தனிநபர் தாக்குதல் தொடுக்கப்பட்டிருந்தன.

இதெல்லாம் தேர்தலுக்கு முந்திய விடயங்கள். இப்போது தேர்தலும் ஒப்பேறிவிட்டது. கூட்டமைப்பும் வென்றுவிட்டது. இனியென்ன எல்லாமே மங்களம்தான் என்று இருக்க முடியாது.

உண்மையில் கூட்டமைப்பு வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் மறக்காமல் மேடைக்கு மேடை முழங்கித்தள்ளிய “ஜனநாயகப்போர்” என்ற போராட்டம் இனித்தான் ஆரம்பிக்கப்போகிறது. தேர்தல் காலத்தில் சந்தித்ததை விடவும் பன்மடங்கு வீரியம் கொண்ட சவால்கல், இடையூறுகள், துரோகங்கள், கழுத்தறுப்புகள், ஒரவஞ்சனைகள், அச்சுறுத்தல்கள் என்பவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டே புதிய சரிதமொன்றுக்கான பயணத்தைக் கூட்டமைப்பு வடக்கு மாகாணசபையில் ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது.

கூட்டமைப்புக்கான வேட்பாளர் தெரிவில் எப்படி இடியப்பச்சிக்கல் போன்று குழப்பம் நீடித்ததோ அதை விட அதிக குழப்பம் மாகாண அமைச்சுப் பங்கீட்டின் போது எழவிருக்கிறது. பரப்புரைக் காலத்தின் போதே கூட்டமைப்புக்காரர்கள் சிலர். “செப்ரெம்பர் 21க்கு பிறகு நான் தான் கல்வி அமைச்சர், நான் தான் நிர்வாக அமைச்சர், நான் பொருளாதார அமைச்சர்” என்று தமக்கு வாயில் வரும் அமைச்சு ஒன்றின் பெயரை தமது கனவுக்கதிரைக்கு இட்டு, அதைத் தமது தொண்டர்களிடமும் பெருமை பொங்கச் சொல்லியே வந்துள்ளார்கள். எனவே மாகாண சபையின் அமைச்சுகள் பகிரப்படும் போது, தாம் குறிவைத்திருந்த அமைச்சோ அல்லது எந்தவொரு அமைச்சுப்பதவியுமோ கிடைக்காவிட்டால் மாகாண சபையின் முதல் அமர்விலேயே கூட்டமைப்புக்குள் குழப்பம் ஏற்பட்டுவிடும். ஆயினும் வேட்பாளர் தெரிவில் ஏற்பட்ட சிக்கல் நிலை ஒரு பாடமாக இருப்பதால், முன்கூட்டியே இத்தகைய பிரச்சினைகள் எதுவும் எழாதவாறு நிலைமையை கூட்டமைப்புக் கையாளவேண்டும். இல்லாவிட்டால் நந்தவனத்து ஆண்டி நாலாறு மாதமாகக் குயவனை கொண்டு வந்த பானையைக் கூத்தாடிப் போட்டுடைத்தைப் போன்று, தமது உரிமைக்குரலுக்காக மக்கள் கொடுத்த ஆணையை இன்னொரு தடவை கூட்டமைப்பு உறுப்பினர்கள் தமது சுயலாப அரசியலுக்காகப் பலியாக்கக் கூடாது. இதுவே கூட்டமைப்பை நம்பி வாக்களித்த அத்தனை பேரினதும் உள்ளார்ந்த பெருவிருப்பாகும். எனவே நாற்காலிக் கனவில் மக்களின் அபிலாஷைகளை எட்டி உதைக்காது , மிக அவதானமாக இந்த விடயத்தைக் கூட்டமைப்புக் கையாளவேண்டியது கட்டாயமாகும்.



> “ வடக்குத்தேர்தலில் தமது முகத்தில் கரிபூசிய தமிழ் மக்களையும், கூட்டமைப்பையும் பழி தீர்க்க, இப்படியான கைங்கரியங்களில் அரசுத் தரப்பு நிச்சயம் இறங்கியே தீரும். தேர்தல் காலத்திலேயே அரசுக்கு துணைபோகும் அல்லது துணைபோகக்கூடிய வேட்பாளர்கள் இருக்கிறார்கள் என்று அதிதீவிர தமிழ்த்தேசியம் பேசுவோர் சுட்டுவிரலை நீட்டியிருந்தார்கள்.அவர்கள் தவிர இன்னும் சிலர் தேர்தலுக்குப் பின்னர் பணம், அதிகாரம், வசதி, வாய்ப்பு என்பவற்றுக்காகக் கொள்கையை உதறிவிட்டு அரசுப்பக்கம் சாய்ந்துவிடுவார்கள் என்றும் ஊகங்கள் பொதுமக்களிடையே எழாமலில்லை. ஆனால் அவையெல்லாம் திட்டமிட்டு உரு வாக்கப்பட்ட புனைவின் சாயங்களில் தோய்த்தெடுக்கப்பட்ட கதையாடல்கள் தான் என்பதனை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் இப்போது வாகை சூடிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு. ”

அதைவிட மஹிந்தரின் வழமையான பிரித்தாளும் தந்திரத்தில் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எவருமே அறிந்தோ அறியாமலோ வீழ்ந்துவிடக்கூடாது. ஏனெனில் வடக்குத்தேர்தலில் தமது முகத்தில் கரிபூசிய தமிழ் மக்களையும், கூட்டமைப்பையும் பழி தீர்க்க, இப்படியான கைங்கரியங்களில் அரசுத் தரப்பு நிச்சயம் இறங்கியே தீரும். தேர்தல் காலத்திலேயே அரசுக்கு துணைபோகும் அல்லது துணைபோகக்கூடிய வேட்பாளர்கள் இருக்கிறார்கள் என்று அதிதீவிர தமிழ்த்தேசியம் பேசுவோர் சுட்டுவிரலை நீட்டியிருந்தார்கள். அவர்கள் தவிர இன்னும் சிலர் தேர்தலுக்குப் பின்னர் பணம், அதிகாரம், வசதி, வாய்ப்பு என்பவற்றுக்காகக் கொள்கையை உதறிவிட்டு அரசுப்பக்கம் சாய்ந்துவிடுவார்கள் என்றும் ஊகங்கள் பொதுமக்களிடையே எழாமலில்லை. ஆனால் அவையெல்லாம் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட புனைவின் சாயங்களில் தோய்த்தெடுக்கப்பட்ட கதையாடல்கள் தான் என்பதனை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் இப்போது வாகை சூடிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு. கூடியிருந்தே குழிபறித்தவர்களால் தான் கைக்கெட்டும் தூரத்தில் இருந்த எங்களின் விடுதலை கண்ணுக்கெட்டாத தொலைவுக்குச் சென்றிருந்தது. எனவே இனியும் அத்தகைய முதுகுக்குத்தல்களை எம்மினம் சந்திக்க தயாரில்லை. மாறாக அரசுப்புலனாய்வாளர்களும், பொதுமக்கள் சிலரும் பரப்பிய கதைகளை உண்மையாக்கி, கங்காருக்களாக மாறி, கூட்டமைப்பின் ஒரு உறுப்பினர் கட்சி தாவினாலும் கூட, மீண்டும் நம்பிக்கையீனக் கடலுக்குள் தமிழ்மக்கள் தூக்கியெறியப்பட்டுவிடுவர்.

ஏனெனில் போருக்கு பின்னர் வடக்கில் நிகழ்ந்திருந்த ஜனாதிபதித்தேர்தல், நாடாளுமன்றத்தேர்தல், உள்ளூராட்சித்தேர்தல் என்பவற்றை விடவும் வடக்கு மாகாண சபைத்தேர்தலில் மக்கள் அதிகம் ஆர்வம் காட்டியிருந்தனர். இதனை கூட்டமைப்பின் கூட்டங்களுக்கு எந்தவித பின்புலத்தூண்டல்களுமின்றித் திரண்டு வந்த சன வெள்ளமும், அதிகரித்த வாக்களிப்பு வீதமும் உணர்த்துகின்றன. இந்த ஆர்வம் மீண்டும் தேர்தல்களில் மக்கள் நம்பிக்கை கொள்ளத் தொடங்கியிருப்பதையே காட்டியதுகாட்டுகிறது.இந்த நிலையில் தாம் நம்பி வாக்களித்த வேட்பாளர் குத்துக்கரணம் அடித்தால், “இதற்காகவா வாக்களித்தோம். இனி அடுத்த தேர்தலில வாக்களிக்காமல் இருக்கிறதுதான் புத்திசாலித்தனம்” என தமது ஏமாற்றத்தின்காரணமாகதவறானமுடிவெடுக்க வாக்காளர்கள் தள்ளப்பட்டுவிடுவர். இது எதிர்காலத்தில் மீண்டும் மந்தமான வாக்களிப்பு நிலையைத்தோற்றுவித்து, அற்ப சொற்ப வாக்குகளைப் பெற்றவர்கள் கூட மக்கள் பிரநிதிகளாகிவிடும் அபத்தம் ஏற்பட்டுவிடும். எமது ஜனநாயகப்போரையும் திட்டமிட்ட திசைநோக்கி நகர்த்த முடியாது போய்விடும்.இதனை மனதிற் கொண்டு, எந்த வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கினார்களோ அவை ஒவ்வொன்றையும் நிறைவேற்ற கூட்டமைப்பின் மாகாண-சபை உறுப்பினர்களும் இதயசுத்தியுடன் பாடுபடவேண்டும்.

இவையெல்லாம் நிகழ்ந்து மாகாண சபையின் ஆயுள்வரை கூட்டமைப்பினர் ஒற்றுமையோடு மக்களுக்காக செயற்பட எழுந்தால், ஆயிரமாயிரம் சந்திர சிறிகளும், ஹத்துருசிங்கக்களும் வந்தாலும் கூட ஒரு துரும்பைக்கூட அசைக்க முடியாது. முன்னைய படிப்பினைகளின் அடிப்படையில் அமைச்சுப்பதவிகளை சர்ச்சைகளின்றி பகிர்ந்து கொள்ளக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது என்று நம்பகரமாக தெரியவருகிறது. மாகாணசபயில் உள்ள 4 அமைச்சுக்களும்ல் ஒவ்வொரு மாவட்டத்தைச் சேர்ந்த வேட்பாளர்களிலும் ஒவ்வொருவர் தெரிவு செய்யப்பட்டு, பகிரப்படவுள்ளது. எஞ்சிய மாவட்டத்துக்கு சபாநாயகர் பதவியை வழங்கவும் கூட்டமைப்புத்தலைமை தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகிறது. என்றாலும் கூட்டமைப்பை நிம்மதியாக மாகாணசபையை ஆள்வதற்கு பேரின அரசு அனுமதிக்கப்போவதில்லை. அதற்கான நடவடிக்கைகள் இப்போதே தொடங்கிவிட்டன அதன் ஒரு கட்டமாக வடக்கு ஆளுநர் சந்திரசிறி அவசர அவசரமாக விடுமுறையில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்லவுள்ளார் என்று தகவல்கள் கசிந்துள்ளன. ஏனெனில் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் உள்ளிட்ட உறுப்பினர்கள் ஆளுநர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்த பின்னே ஆட்சிக்கட்டிலில் அமர முடியும். எனவே கூட்டமைப்பு அரியணை ஏறுவதை இயன்றளவைத் தாமதப்படுத்தவே சந்திர சிறியின் வெளிநாட்டுப் பயணம் என்றும் சொல்லப்படுகின்றது.எது என்னவோ கூட்டமைப்புக்கு எதிரான ஆடு, புலி ஆட்டத்தை தேர்தலின் பின்னரும் அரசு கைவிடப்போவதில்லை. மாறாக அது இன்னும் தீவிரப்படுத்தவே போகின்றது என்பதனையே கூட்டமைப்பு உறுப்பினர்கள், பிரமுகர்கள் என்போரின் வீடுகள் மீது ஆரம்பிக்கப்பட்டுள்ள கழிவு ஒயில் வீச்சுக்கள் என்று கொள்ளமுடியும்.

இனிவரும் காலங்களில் பெருகியோடப் போகும் நெருப்பாற்றை நீந்திக்கடக்குமா கூட்டமைப்பு? ■

தாயகத்திலிருந்து இளையபல்லவன்

# நம்மவர் நிகழ்வுகள்

## விக்டோரியா மாநிலத்தில்

| | |
|---|---|
| 28th Sept 2013 | Maestro Ilayaraja's Mega musical program - MKS spices & Things |
| 28th Sept 2013 | Casey Tamil Mantram's Monthly Seniors Meeting |
| 29th Sept 2013 | Thiyagi Thileepan Rememberance Programme - TCC Vic |
| 29th Sept 2013 | Miruthanga Arangetram - IAA |
| 29th Sept 2013 | Badminton Tournament - Aus Tamil Academy |
| 19th Oct 2013 | Tamil Senior Citizens Fellowship - Monthly Meeting |
| 26th Oct 2013 | Casey Tamil Mantram's Monthly Seniors Meeting & AGM |
| 26th Oct 2013 | Neenthi Kadantha Neruppaaru' Book Release |
| 27th Oct 2013 | Bharathy Tamil School - Senior Students Annual Concert(Thamil Maalai 2013) |
| 2nd Nov 2013 | ASoGT Tamil Competition 2013 - Prize Giving Ceremony |
| 3rd Nov 2013 | Kamban Vizha - Kamban Kazhagam |
| 3rd Nov 2013 | Malarum mottukal |
| 16th Nov 2013 | Tamil Senior Citizens Fellowship - Monthly Meeting |
| 23rd Nov 2013 | Casey Tamil Mantram's Monthly Seniors Meeting |
| 27th Nov 2013 | Maveerar Remembrance Day 2013 - Tamil Co-ordinating Committee |
| 7th Dec 2013 | Tamil Senior Citizens Fellowship - Monthly Meeting |
| 14th Dec 2013 | Casey Tamil Mantram's Monthly Seniors Meeting |
| 14th Dec 2013 | Laughing Co Laughing 2013 -Australian Medical Aid Foundation (AMAF) Bundoora |
| 15th Dec 2013 | Laughing Co Laughing 2013 -Australian Medical Aid Foundation (AMAF) Rawville |
| 25th Dec 2013 | TRO Australia's Annual Christmas Appeal on 3CR & 24Hr IBR |
| 5th Jan 2014 | Annual Cricket tournament by JHC OBA Vic |

### *VIC - Monthly Meetings*

*Casey Tamil Mantram's Monthly Seniors Meeting (4th Saturday of Month)*
*23rd Feb, 22nd Mar, 27th April, 25th May, 29th June, 27th July, 24th Aug, 28th Sep, 26th Oct, 23rd Nov, 14th Dec*
*Time: 10.00 am - 2.30 pm @ Berwick Senior Citizens Hall, 112 High Street, Berwick, 3806*

*Tamil Senior Citizens Fellowship - Monthly Meeting (3rd Saturday of Month)*
*16th Mar, 20th Apr, 18th May, 15th June, 20th July, 17th Aug, 21st Sep, 19th Oct, 16th Nov, 7th Dec*
*Time: 11 am - 2.30 pm @ Oakleigh Hall, 142 Drummond St, Oakleigh 3166*

## நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில்

| | | |
|---|---|---|
| 28-Sep | Sat | Annual General Meeting - Tamil Senior Citizens' Association NSW Inc. |
| 28-Sep | Sat | Annual Dinner - Methodist Girls High School |
| 28-Sep | Sat | Annual General Meeting - Australian Tamil Congress (ATC) |
| 29-Sep | Sun | NADHAM - Sublime Musical Journey - Swara- Laya |
| 5-Oct | Sat | Thulir 2013- Voice of Tamils (VOT) |
| 6-Oct | Sun | Velu Naachchiyar -a historical Tamil Ballet - Transnational Government of Tamil Eelam ( TGTE) |
| 12-Oct | Sat | Fellowship Dinner - Consortium of Tamil Associations (NSW) |
| 19-Oct | Sat | Seran's Dance Performance in Aid of Patchwork |
| 19-Oct | Sat | Jaffna College Alumni Association Silver Jubilee celebrations |
| 26-Oct | Sat | Kamban Vizha 1 st Day- Kamban Kazhagam |
| 26-Oct | Sat | Arangadal 2013 -Jaffna University Graduates Association |
| 26-Oct | Sat | Thillaana -3 - Sydney Tamil Manram |
| 26-Oct | Sat | General Election -Transnational Government of Tamil Eelam ( TGTE) |
| 27-Oct | Sun | Kamban Vizha 2 nd Day- Kamban Kazhagam |
| 2-Nov | Sat | Tamil Cultural Event - Australian Tamil Association (ATA) |
| 9-Nov | Sat | Tamil Osai Ilakkiya Vizaa |
| 21-Nov | Thurs | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 22-Nov | Fri | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 23-Nov | Sat | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 24-Nov | Sun | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 25-Nov | Mon | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 26-Nov | Tues | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 27-Nov | Wed | Maveerar Remembrance Day 2013 - Tamil Co-ordinating Committee |
| 30-Nov | Sat | AGM- Eastwood Tamil Study Centre |
| 8-Dec | Sun | Muththamil Maalai 2013 -Australian Medical Aid Foundation ( AMAF) |
| 14-Dec | Sat | Wentworthville Tamil Study Centre- Prize giving and AGM |
| 14-Dec | Sat | Annual Dinner and Presentation Night - Eastwood Tamil Study Centre |
| 25-Dec | Wed | Christmas |
| 31-Dec | Tues | End New Year |



ஈழமுரசு

அஞ்சல் தொடர்புகளுக்கு
*Eelamurasu*
*P.O.Box 80*
*Kingsville*
*Vic 3012 Australia*

ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
*emurasu@gmail.com*

விளம்பர விநியோக
தொடர்புகளுக்கு
*advertise@eelamurasu.com.au*
*0402948607*

வருட சந்தா
$ 60.00
மட்டுமே

குறிப்பு
இவ்விதழில் பிரசுரிக்கப்படும்
விளம்பரங்களுக்கு அந்தந்த
விளம்பரதாரர்களே பொறுப்பு.
வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச்
செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

COMMUNITY NEWSPAPER ASSOCIATION
MEMBER
OF VICTORIA

## அறிவித்தல்

வாசகர்கள் மற்றும்
விளம்பரதாரர்கள்
அனைவரும் ஈழமுரசிற்கான
உங்களது ஆக்கங்கள்
மற்றும் விளம்பரங்கள்
ஆகியவற்றை
மேலுள்ள
மின்னஞ்சல் முகவரிக்கு
அனுப்பிவைக்கும்படி
அன்புடன் வேண்டிக்
கொள்கின்றோம்.

– நிர்வாகம்

# ஆசிரியர் தலையங்கம்

முரசு - 23 முழக்கம் - 299

## மாகாணசபை வெற்றி! சொல்லும் பாடமென்ன?

ஒருவழியாக வடமாகாணசபைத் தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் ஆட்சியைக் கைப்பற்றும் என்பது வெளிப்படையானபோதும் எதிர்பார்த்ததையும் விட பெருவெற்றியைப் பெற்றுள்ளது. தமிழ்மக்களும் அதிகரித்தளவில் இம்முறை வாக்களிப்பில் கலந்துகொண்டுள்ளார்கள்.

இத்தேர்தலுக்கான பரப்புரைக் காலத்தில் நிகழ்ந்தவையும் தேர்தல் பெறுபேறுகளும் எமக்கும் உலகுக்கும் மிக முக்கியமான சில செய்திகளைச் சொல்லி நிற்கின்றன. இத்தேர்தலில் தமிழ்மக்கள் தாயகக் கோட்பாட்டின் அடிப்படையிலும், ஒற்றுமையை வெளிப்படுத்தும் நோக்கிலும் அரசதரப்புக்கான எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையிலுமே த.தே.கூ. இற்கு வாக்களித்துள்ளனரேயன்றி மாகாணசபை முறையிலான தீர்வுக்கோ 13ஆம் திருத்தச்சட்டத்துக்கோ அல்லது கூட்டமைப்பு உயர்பீடத்தினரின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கோ அன்று. தேர்தலின் முன்னர் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலும் தமிழ்ச் சிவில் சமூகம் வெளியிட்ட அறிக்கையிலும் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மீதான விமர்சனத்தை வெளிப்படுத்தி, ஆனால் கூட்டமைப்பை ஆதரித்து வாக்களிப்பது தவிர்க்க முடியாது என்ற அடிப்படை சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அவ்வகையில் தேர்தல் வெற்றியென்பது தமிழர் தரப்புக்கு ஒரு வெற்றியேதான்.

ஏற்கனவே பயந்தது போன்றே கூட்டமைப்பின் தலைமையிடமிருந்து கருத்துக்கள் வெளிவரத் தொடங்கியுள்ளமை கவலையளிக்கின்றது. தமக்குக் கிடைக்கும் வெற்றியை தமக்கேற்றபடி திரித்து வியாக்கியானங்களை கூட்டமைப்புத் தலைமை வெளியிடக்கூடுமென்ற பயம் பரந்துபட்டளவில் இருந்துவந்தது. கடந்த ஈழமுரசு ஆசிரியர் தலையங்கத்திலும் இது சுட்டப்பட்டிருந்தது.

அதுபோலேவே ‘இணைந்த இலங்கைக்குள் சமத்துவமாக வாழ்வதற்கான ஆணையாக இந்தத் தேர்தல் வெற்றி அமைந்துள்ளது. 13ஆம் திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வை அமைக்க மக்கள் வாக்களித்துள்ளார்கள்’ என்ற கருத்துப்பட கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தேர்தல் வெற்றிச் செய்தியை எடுத்தியம்பியுள்ளார். இராச தந்திரம் என்ற போர்வைக்குள் இதை எளிதாகப் பதுக்கிவிடலாம். ஆனால் இந்நேரத்தில் இப்படியொரு வியாக்கியானம் கொடுப்பது எவ்வகையில் தந்திரமாகுமென்பது புரியாத புதிர் என்பதோடு இக்கருத்து தமிழரின் உரிமைப்போராட்டத்தில் ஏற்படுத்தப் போகும் பாதிப்பு மிகமிகப் பெரியது.

புலத்திலும் தமிழகத்திலும் தமிழர்கள் தமது விடுதலை வேட்கையை வெளிப்படுத்த முடியா நிலைக்கு இது இட்டுச் செலலக்கூடும். தாயகத்திலும் மாகாணசபை என்ற குண்டுச்சட்டியை விட்டு வெளியே வரமுடியா துர்ப்பாக்கிய நிலையைத் தமிழர் தரப்பு எதிர்நோக்க நேரும். ஆக, புலத்திலும், தமிழகத்திலும், தாயகத்திலும் தமிழரின் உரிமைப் போராட்டத்தை நீர்த்துப் போகச்செய்யும் ஒரு படியாக இந்த மாகாணசபை வெற்றி பயன்படுத்தப்பட்டு விடுமோ என்ற ஐயம் பலமாக எழுகின்றது. யாரோ எழுதிக்கொடுக்க அவையிலே வந்து அதை ஒப்புவிக்கும் இந்தச் செயல் ஒருபோதும் தமிழ்மக்களுக்கு விடிவைப் பெற்றுத்தராது.

மறுபக்கத்தில் எம்மைத் தேற்றிக்கொள்ளவும், எம்மை உற்சாகப்படுத்தவும் கூடிய சம்பவங்களும் செய்திகளும் இத்தேர்தலில் உள்ளன. தேர்தல் பரப்புரைக்காலத்தில் த.தே.கூ. வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் வெளிப்படையாகவே தமிழீழ விடுதலைப் போராட்டம், தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழத் தேசியத் தலைவர், மாவீரர்கள் பற்றி பேசிவந்தனர். சிறிலங்கா படைத்தரப்பினதும் புலனாய்வுப் பிரிவினரதும் கண்காணிப்புக்குள்ளும் கடுமையான அழுத்தங்களுள்ளும் நின்றுகொண்டு துணிந்துநின்று அவர்கள் அந்தப் பரப்புரையைச் செய்தார்கள். தாயகத் தேர்தலில் விருப்பு வாக்கு அடிப்படையில் அனந்தி சசிகரன் பெரும் வெற்றியைப் பெற்றிருப்பதும் இக்கோணத்திலேயே பார்க்கப்பட வேண்டும். எந்தவித அரசயில் பாரம்பரியமுமின்றி, பணபலமின்றி, அரசியற்கட்சிகளின் ஆதரவுகூட இன்றி – இன்னும் சொல்லப்போனால் ஒருவிதத்திலே தேர்தற் பரப்புரைகளில் ஒதுக்கப்பட்டுக் கொண்டிருந்த நிலையிலும் அனந்தி அவர்களால் பெருவாரியானளவில் விருப்பு வாக்குகளைப் பெறமுடிந்திருக்கிறது.

இதேவேளை, மாற்று நிலைப்பாடு கொண்டிருந்தபோதுங்கூட தமிழ்மக்களின் நாடி நரம்புகளில் ஆழ வேரோடியிருக்கும் தாயக விடுதலைக்கான அவாவையும், மாவீரர்கள் - விடுதலைப் புலிகள் மீதான நேசத்தையும், தேசியத்தலைவர் மீதான பற்றையும் தமக்கான வாக்குச் சேகரிப்புக்கான வசீகரங்களாக சில தலைவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள்.

‘நாங்கள் எதைச் செய்தாலும், பேசினாலும் புலிகளின் பெயரைச் சொல்லியே எம்மை எதிர்கொள்கிறீர்கள். இப்படித்தான் தொடர்ந்தும் செய்யப்போகிறீர்களென்றால் நாங்கள் புலிகளாகவே இருந்துவிட்டுப் போகிறோம்’ என்ற கருத்துப்பட திரு. சுரேஸ் பிரேமச்சந்திரன் பேசியிருந்தார். தர்மலிங்கம் சித்தார்த்தன் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியில் ‘தம்பி’, ‘தம்பி’ என தேசியத்தலைவரைப் பலமுறை விளித்தும் வியந்தும் அச்செவ்வியை வழங்கியிருந்தார். தமக்கும் புலிகளுக்கும் கொள்கையளவில் எவ்வித பிரச்சனையுமிருக்கவில்லை என்றும் இரு இயக்கங்களுமே தனித்தனி வழியில் போராடின என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

வல்வெட்டித்துறையில் விக்னேஸ்வரன் அவர்களின் தேர்தல் பரப்புரைக்கூட்டத்தைத் தொடர்ந்து ‘பிரபாகரன் ஒரு மாவீரன்’ என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டதைத் தலைப்புச் செய்தியாக்கி வரிப்புலி உடையோடு தேசியத்தலைவரின் படத்தை முகப்பில் போட்டு த.தே.கூ. வெளியிட்ட ‘வீடு’ என்ற பத்திரிகையை வெளியிட்டது.

அதாவது விடுதலைப் புலிகளையோ தேசியத் தலைவரையோ விமர்சித்தோ எதிர்த்தோ கருத்துச் சொல்ல முடியாத நிலைக்கு மட்டுமல்ல, அவர்களை ஆதரித்தும் போற்றியும் கருத்துச் சொல்லியே அரசியல் செய்ய வேண்டிய நிலைக்கு இத்தலைவர்களை வரலாறு கொண்டுவந்து விட்டுள்ளது என்பதே எமக்கான முக்கிய செய்தி.

தாயகத்திலே மக்களின் உணர்வலைகளின் துடிப்பு இப்படியிருக்கையில், புலத்திலே புலிகளைப் பதுக்கிவைப்பது, தேசிய அடையாளங்களைத் தாங்கி நிற்பதில் தயக்கம், எமக்கான அரசியல் அபிலாசையை வெளிப்படையாகவும் துணிந்தும் சொல்லவதில் மழுப்பல் என்றவாறு எம்மிடையே இருக்கும் மயக்கம் தொடர்பில் நாம் மீள்பரிசீலனைக்கு முன்வர வேண்டிய தருணமிது என்பது புலத்துத் தமிழருக்கான செய்தி.



*“போர் முடிந்த பின்னர் காப்பெற் வீதிகளால் வடக்கை மூடி, கிளி நொச்சி வரை யாழ்தேவியை வரச்செய்து, அபிவிருத்தி உச் சத்துக்கே தமிழ் மக்களைக் கொண்டு சென்று விட்டதாகக் கூறிய அரசதரப்பு இப்படி குப்புறக் கவிழ்ந்தது ஏன்? இப்படிச் சில வினாக்களுக்கு விடை தேட வேண்டியது அவசிய மாகின்றது.”*

# கூட்டமைப்பின் வியூகத்தினுள் மஹிந்த வீழ்ந்தது எப்படி?

## நிகரிலன்

திரும்புகின்ற இடமெல்லாம் வெற்றியைத் தவிர வேறொன்றும் அறியாத மஹிந்த அரசுக்கு மரண அடி விழுந்திருக்கிறது வடக்கில். நாட்டு மக்கள் முழுப்பேரும் தங்களை மட்டுமே ஆதரிப்பதாகவும், தமிழ் மக்களை விடுதலைப்புலிகள் ஆயுத முனையில் அச்சுறுத்தியே அரசுக்கு எதிராக செயற்படவைப்பதாகவும் புலிகள் இருந்த காலத்தில் பேரினம் கதை அளந்து கொண்டிருந்தது.

“விடுதலைப்புலிகள் மட்டுமே விடுதலை, சுதந்திரம், தமிழீழம் என்றெல்லாம் மக்களை உணர்ச்சியூட்டி வருகிறார்கள். ஆனால் உண்மையில் தமிழ் மக்கள் அவற்றை விரும்புவதில்லை.

இலங்கையிலுள்ள ஏனைய மக்கள் அனுபவிக்கும் வசதிகளை அவர்களும் அனுபவிக்க விடாமல் புலிகள் தடை போடுகிறார்கள்.” என்று தமிழ் மக்களுக்கு உரிமை பற்றிய விடயத்தில் எந்தவொரு அக்கறையும் இல்லை என்பது போலவே ஆட்சியாளர்கள் காட்ட முற்பட்டார்கள். ஆனால் உண்மையில் விடுதலை பற்றிய தாகம் தமக்குள் வற்றிவிடவில்லை என்பதை மக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியே வந்துள்ளார்கள். உலகின் கவனத்தை ஈர்த்த பொங்கு தமிழ் நிகழ்வு இதற்கு நல்லதொரு உதாரணம்.

1995 ஆம் ஆண்டு யாழ். குடாநாடு அரச படைகளின் இரும்புப் பிடிக்குள் வந்த பின்னர் ஓர் இருண்ட யுகமே நிலவியது. ஆறு மணியானவுடன் ராணுவக் கட்டளையால் ஊரடங்கிப் போகும்.

இலக்கத்தகடற்ற வெள்ளை வாகனங்கள் ஆட்களை அள்ளிப் போகும். பின்னர் அவர்கள் செம்மணிக்குள் அடங்கிப் போகவேண்டியதுதான். சந்தேகம் என்ற பெயரில் வீதிகள் எங்கும் குருவிகள் போல இளைஞர்கள் சுடப்பட்டார்கள். முகாம்களுக்குள் கொண்டு செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார்கள். எங்களின் வாழ்வு எங்கிருந்தோ வந்தவர்களால் தீர்மானிக்கப்பட்டது.

எங்கும் குருதியின் வாடை. தட்டிக்கேட்க எவரும் இல்லை. மூடப்பட்ட பூமிக்குள் நடந்தேறிய அக்கிரமங்கள் வெளியுலகுக்குத் தெரி யாமலேயே போயின. இந்த நிலையில் தான் அரசின் அடக்குமுறை வேலியை உடைத்தெறிந்து கொண்டு உண்மையின் குரலைப் பொங்கு தமிழ் மூலம் உலகுக்குச் சொன்னார்கள் பல்கலை மாணவர்கள். இந்த மாணவர் போராட்டத்துக்கு மக்கள் தாமாகவே திரண்டு வந்து தமது எழுச்சி பூர்வமான பங்களிப்பை வழங்கினார்கள்.

ஆனால் இந்த மக்கள் எழுச்சிக்கும் புலிச்சாயம் பூசியது அரசு. பல்கலை மாணவர்களையும், மக்களையும் புலிகளே பின்னின்று இயக்குகிறார்கள் என்று சிங்கள அரசு பிரசாரம் செய்தது .

இதனைச் சில நாடுகள் நம்பவும் செய்தன. ஏனெனில் அப்போது புலிகளின் இருப்பு இலங்கையில் இருந்தது.

ஆனால் புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டார்கள் என்று அரசாங்கமே பறை தட்டி நான்கு வருடங்கள் கழிந்த பின்னர் நடைபெற்ற தேர்தலில் - வடக்கு மாகாண வரலாற்றில் முதல் முறையாக 70 வீதத்துக்கும் அதிகமான மக்கள் வாக்களித்த தேர்தலில் - தமிழ் மக்கள் தம்முடைய பிரதிநிதிகளாக கூட்டமைப்பை தெரிவு செய்து மஹிந்த அரசின் முகத்தில் ஓங்கி அறைந்திருக்கிறார்கள். 1977 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பின்னரும் இத்தகையதொரு எழுச்சி நிலை தமிழ் மக்களிடையே ஏற்பட்டிருந்தது. ஆனால் அப்போது கூட இல்லாதளவுக்கு இப்போது கூட்டமைப்பு மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கிறது.

இந்த வெற்றி எப்படிச் சாத்தியமானது? போர் முடிந்த பின்னர் காப்பெற் வீதிகளால் வடக்கை மூடி, கிளிநொச்சி வரை யாழ்தேவியை வரச்செய்து, அபிவிருத்தி உச்சத்துக்கே தமிழ் மக்களைக் கொண்டு சென்றுவிட்டதாகக் கூறிய அரசதரப்பு இப்படி குப்புறக் கவிழ்ந்தது ஏன்? இப்படிச் சில வினாக்களுக்கு விடை தேடவேண்டியது அவசியமாகின்றது.

மற்றைய மாகாணங்களுக்கான தேர்தலை குறித்த மாகாணசபை அரசின் ஆட்சிக்காலம் முடியும் முன்பாகவே வைத்து தன் பலத்தை நிஷரூபித்து வந்த மஹிந்த



அரசு, வடக்குத்தேர்தல் என்றவுடன் மட்டும் பேதி குடித்தவனைப் போல பின்னுக்குப் போய் ஒளிந்து கொண்டது. இப்போது வைக்கிறோம், அப்போது வைக்கப்போகிறோம் என்று காலத்தை இழுத்தடித்து வந்ததே தவிர தேர்தலை மட்டும் நடத்தியபாடாயில்லை. தேர்தலை நடத்தினால் தோல்வி நிச்சயம் என்பது அரசாங்கத்துக்கு நன்கு தெரிந்தே இருந்தது. அதனால் எந்தளவுக்கு இழுத்தடிக்க முடியுமோ அந்தளவுக்கு வடக்குத்தேர்தலை நடத்துவதை இழுத்தடித்துக் கொண்டிருந்தது.

போர் முடிந்துவிட்டது, இயல்பு வாழ்வு திரும்பி விட்டது என்று உலகெல்லாம் சொல்லும் அரசு, வடக்குத்தேர்தலை மட்டும் நடத்தாதிருப்பது சர்வதேசநாடுகளிடம் இலங்கை பற்றிய சந்தேகங்களை எழுப்பியது. இது கடந்த முறை ஜெனிவாவில் நடைபெற்ற பூகோளகால மீளாய்வு மாநாட்டிலும் எதிரொலித்தது. “வடக்குத்தேர்தலை நடத்தப்போகிறீர்களா இல்லையா?” என்று இலங்கையின் சட்டைக் கொலரைப் பிடித்துக் கேட்காத குறையாக உலகநாடுகள் வெகுண்டெழுந்ததைக் கண்ட, இலங்கை அதிலிருந்து தப்புவதற்காக ஒகஸ்ட் மாதம் வடக்குத்தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்தது. அப்படியிருந்தும் ஜோதிடர்களின் அறிவுரைப்படி செப்ரெம்பர் 21 ஆம் திகதிதான் தேர்தல் என்று நாள் குறித்தார் மஹிந்த.

வடக்குத்தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் அரசியற்கட்சி அலுவலகங்கள் சுறுசுறுப்படையத்தொடங்கின. வேட்பாளர் பட்டியல்கள் தயாரிப்பதில் ஒவ்வொரு கட்சிக்குள்ளும் பிடுங்குப்பாடுகள் கிளம்பின.

அதிலும் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் தெரிவில் எழுந்த சிக்கல்தான் எல்லோரது கவனத்தையும் ஈர்த்தது. மாவை. சேனாதிராசாதான் கூட்டமைப்பின் வடமாகாண முதலமைச்சர் வேட்பாளர் என்ற நிலைதான் ஆரம்பத்தில் இருந்தது. ஆயினும் திடீரென முன்னாள் நீதியரசர்

விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளர் போட்டியில் குதிக்க , கூட்டமைப்புக்குள் பெரும் பிளவு நிலை தோன்றியது. இது அரசுக்கு பெரும் மகிழ்வை ஏற்படுத்தியது. இப்படிக் கூட்டமைப்பு பிளவுபடும் என்று தெரிந்திருந்தால் முன்னரே தேர்தலை வைத்திருக்கலாமே என்றும் அது யோசித்தது. நீண்ட வாதப்பிரதிவாதங்கள், கூட்டங்கள், தனித்து நின்று கேட்போம் என்பன போன்ற வெருட்டல்கள், ஊடகங்களின் ஊகங்கள் என்பவற்றையெல்லாம் தாண்டி, ஒருவழியாக விக்னேஸ்வரன் கூட்டமைப்பின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

புதிய ஒரு தலைமையை மக்கள் விரும்புவதாலும் சர்வதேச ரீதியில் தமிழர் பிரச்சினைகளை கையாள புலிச்சாயம் இல்லாத புத்திஜீவி என்ற வகையிலுமே விக்கியை களமிறக்கியதாக கூட்டமைப்பினர் தெரிவித்திருந்தனர்.

விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாள ராக தெரிவுசெய்யப்பட முதல் அரச தரப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தயாமாஸ்ரர், தமிழினி, அங்கயன் இராமநாதன், கே.பி இவர்களில் ஒருவர்தான் முதலமைச்சர் வேட்பாளராக வருவார் என்று கதைகள் எழுந்தன. இந்தகதைகள் அரசதரப்பிலிருந்தே கிளப்பிவிடப்பட்டிருந்தன. ஆனால் விக்கி களமிறக்கப்பட்டவுடன் அரசின் வியூகம் முற்றுமுழுதாக மாறிப்போனது. அதுவரையும் முதலமைச்சர் வேட்பாளர் கனவில் மிதந்தவர்களை தூகியெறிந்துவிட்டு, ஈ.பி.டி.பியின் தவராசாவை வெளிநாட்டில் இருந்து தருவித்து முதலமைச்சர் வேட்பாளராக அறிவித்ததுடன், இராணுவப்புலனாய்வுப் பிரிவால் சிபார்சு செய்யப்பட்ட வேட்பாளர்களையும், அங்கயன் இராமநாதனையும், ஈ.பி.டி.பியினரையும் இணைத்து வெற்றிலையில் போட்டியிடக் களமிறக்கியது.

இதன் பின்னர் அரசதரப்பு தன் கட்சிக்கு ஆதரவால செய்த பிரசாரங்களை விடவும், கூட்டமைப்புக்கு எதிராக மேற்கொண்ட பிரசாரத்துக்கே அதிக நேரத்தையும் பணத்தையும் செலவிட்டிருந்தது. குறிப்பாக விக்னேஸ்வரனையும், அனந்தி சசிதரனையும் குறிவைத்து பல்வேறு விதமான நடவடிக்கைகளில் அரசு இறங்கியது. “விக்னேஸ்வரன் அமைச்சர் வாசுதேவவின் சம்பந்தி. அவருக்கு வடக்கை பற்றி எதுவுமே தெரியாது. அவர் வந்தால் எங்களுக்கு நன்மை” என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட இந்த பிரசாரத்தில் பங்கெடுத்தார். இதை விட கூட்டமைப்பு எதிரான நோட்டீஸ்களை ஒட்டுவதற்கு படையினருக்கு பணிப்பு விடுக்கப்பட்டது.

ஆரம்பத்தில் தமிழ் மக்களில் பெரும் பகுதியினர் விக்னேஸ்வரனின் தெரிவை ஏற்றுக்கொள்ளவில்லை. அரசு சொன்னதைப் போன்று கொழும்பில் வசித்த விக்னேஸ்வரன் எங்களின் பிரச்சினைகளை எப்படி விளங்கிக் கொள்ளமுடியும்? என்ற கேள்வி அவர்களிடத்தே இருந்தது. இதை இன்னும் அதிகப்படுத்துவது போல சில சர்ச்சைக்குரிய கருத்துக்களையும் ஆரம்பத்தில் விக்னேஸ்வரன் வெளியிட அதை ஊதிப்பெருப்பித்து, அவரை ஒரு சிங்கள வர்க்கத்துக்கு அடிபணியும் ஒருவராகக் காட்டமுற்பட்டது. இந்த நிலை யில் வல்வெட்டித்துறையில் நடந்த பிரசாரக்கூட்டம் விக்னேஸ்வரன் மீதான அபிமானப்பேரலையை ஒரே நொடியில் தோற்றுவித்தது. அங்கு “புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு மாவீரன். இதை நான் சிங்கள மக்களுக்கும் சொல்லியுள்ளேன்” என்று உரையாற்றும் போது எழுந்த கரகோஷம் அவருக்கு தமிழ் மக்கள் தன்னிடம் எதனை எதிர்பார்க்கிறார்கள் என்பதை உணர்த்தியது. மேல்தட்டு அரசியல் பாணியை விடுத்து மக்களுக்கு தேவையான அரசியலை விக்கி இதன் பின்னர் கையில் எடுத்தார். அதன் பின்னர் எல்லா மேடைகளிலும் புலிகள், பிரபாகரன், மாவீரர்கள், விடுதலைப்போராட்டம் என்று மக்கள் எதிர்பார்க்கும் வகையில் விக்னேஸ்வரன் உரையாற்றத் தொடங்கினார். இதன் விளைவாக கூட்டமைப்பின் கூட்டங்களில் அலைகடலென மக்கள் திரண்டு வந்து பங்கேற்றார்கள். அதிலும் விக்னேஸ்வரனைப் பார்க்கவும் அவரின் உரையைக் கேட்கவும் என்று மட்டும் வந்தவர்கள் பலர்.

இந்தநிலையில் “பிரபாகரன் கேட்டதைத் தான் விக்னேஸ்வரனும் கேட்கிறார்” என்று தெரியாத்தனமாக அர்சு சொல்லிவிட, விக்னேஸ்வரனை பெரும்பாலான தமிழர்கள் மானசீகமாக ஏற்றுக் கொண்டார்கள்.

இதைவிடவும் இம்முறை கூட்டமைப்பின் சார்பில் ஆர்னல்ட், சயந்தன், கஜதீபன், சுகிர்தன், குகதாசன், அனந்தி என்று இளையவர்கள் களமிறக்கப்பட்டதால் கடந்த காலத் தேர்தல்களில் அக்கறை காட்டாதிருந்த இளைஞர்கள் திரண்டு வந்து கூட்டமைப்புக்காக பிரசாரப் பணிகளில் ஈடுபட்டார்கள்.

இளைஞர்களின் ஆர்வம் அரசிய லின் பக்கம் பூரணமாகத்திரும்பியதால் கூட்டமைப்பின் கொள்கைகள், வேட்பாளர் அறிமுகங்கள் பரவலடைந்தன.

புலம்பெயர் தமிழர்களும் வடக்கு மாகாண சபையை கூட்டமைப்புக் கைப்பற்றுவதற்காக தம்மாலான நிதியுதவிகளை வழங்கியிருந்தனர். இந்த நிதிமூலம் அரசுத் தரப்புக்கு நிகராக பிரசாரப்போரை நடத்த முடிந்தது.

இதைவிட கூட்டமைப்பினர் “ எமது வெற்றி ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. ஆனால் ஆளுநரை அதிகாரமற்றவராக ஆக்க வேண்டுமெனில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அதனை மக்கள் தரவேண்டும்” என்ற கருத்தை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தனர். எனவே வெல்லபோகும்

(18ஆம் பக்கம் பார்க்க)


MKS Spices'n Things
proudly presents
Isaignani Padmabhushan
'Maestro' ILAYARAJA Live in Concert
...ராஜா ராஜா தான்...
Raja Raja than...
For the first time in Australia!!!
With Symphony Style Live Orchestra constituting over
50+ Musicians!! 10+ Playback Singers
FEATURING HIS GOLDEN MELODIES TO MELT MELBOURNIANS
Chitra
Karthik
Madhu Balakrishnan
Jayachandran
S.P Sailaja
Chinmayi
Karthik Raja
Bhavatharini
Ramya NSK
Sathyan
Surmukhi
Priya Himesh
Belli Raj
Senthi Dass
Airtel Anita
Priyadarshini
Sri Vardhani
TICKETS
For Online Booking
www.mks.net.au
THE PLENARY
MELBOURNE CONVENTION EXHIBITION CENTRE
1 Convention Centre Place, South Wharf 3006
Saturday 28th September 2013 6:00pm
To Advertise on this Event Please Contact 0425 755 539
MKS has organized special bus services departing from each of the outlets to & from the venue. Please reserve your seats now to avoid disappointment
Event Sponsors
KATOOMBA
Growing Strong Since 1959
Indya
NAVASAKTI
Double Horse
Rabeena
VANSAN
BRITANNIA
MTR
AIR INDIA
EMS EXCHANGE
Pattu
further details contact MKS Spices'n Things
Ashwood - 9885 9932 Dandenong - 9701 3165 Preston - 9416 9011 info@mks.net.au www.mks.net.au

# தளராத உறுதியுடன்

# வரலாற்றில் வெளிச்சத்தை தேடி..




தென் ஆசியவியல் மையத்தால் சிட்னியில் 14-09-2013 அன்று ஈழத்தமிழர் வரலாற்று ஆவண கையளிப்பு நிகழ்வு நடைபெற்றது. ஸ்ரத்பீல்ட் நகர மண்டபத்தில் நடைபெற்ற இம்முக்கிய நிகழ்விற்காக, யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பேராசிரியர் வி.பி. சிவநாதன் வருகைதந்திருந்தார். அத்தோடு கிளிநொச்சி லிபரா நூலக ஒருங்கிணைப்பாளர் வண. பிதா லெபோன் சுதன் ஜேசுதாசன் அவர்களும், சிறப்பு விருந்திநராக நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்.

பேராசிரியர் குணசிங்கம் அவர்கள், நீண்டகாலமாக ஈழத்தமிழர்களின் வரலாறு தொடர்பாக பல்வேறு வேலைத் திட்டங்களை செய்துவருபவர். “Sri Lankan Tamil Nationalism: A Study of its Origins” என்ற நூலையும் Tamils in Sri Lanka: A Comprehensive History (300 BC - 2000 AD) என்ற நூலையும் The Tamil Eelam Liberation Struggle (1948 - 2009) என்ற நூலையும் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒரே நேரத்தில் வெளியிட்டவர்.

அன்றைய நிகழ்வு அவரது இன்னொரு வேலைத்திட்டத்தின் நிறைவுநாளாக இருந்தது. அவரால் நான்கு வருடங்களாக பல நாடுகளுக்கு சென்று சேகரிக்கப்பட்ட, ஈழத்தமிழர் தொடர்பான பல்வேறு ஆவணங்களை, நவீன தொழிநுட்பத்தில் டிஜிட்டலைஸ் செய்து தமிழர் தாயகத்திலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு கொடுப்பதே, அன்றைய நாளின் முக்கியவிடயமாகவிருந்தது. இதன் பிரதி ஒன்று கான்பரா பல்கலைக்கழகத்திற்கும் கொடுக்கப் படவிருக்கின்றது.

முக்கியமாக இந்தியாவின் கோவா, போர்த்துக்கல், கொலண்ட், பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்று ஈழத்தமிழர்கள் தொடர்பான பல்வேறு ஆவணங்களை பேராசிரியர் குணசிங்கம் சேகரித்து இருக்கிறார். இவை 1200 அஉைசழகடைஅ சுருள்களிலும் 5400 இற்கும் மேற்பட்ட microfiches களிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. கையால் வரையப்பட்ட 18000000 A4 அளவு புராதன இலங்கை வரைபடங்களும் இவற்றுள் அடங்கும்.

முக்கியமான ஆவணங் களை நீண்டகாலத்திற்கு சேகரித்துவைப்பதற்கே microfilm பயன்படுத்தப்பட்டு வருகின்றது. உலகத்தின் பல நாடுகளுக்கும் சென்று திரட்டிய 120000 டொலர்களை பயன்படுத்தி, இவ்வரலாற்று ஆவணங்களை பிரதிசெய்து மலேசிய பல்கலைக்கழ கத்திற்கு அன்பளிப்பு செய் திருக்கிறார். மலேசிய பல்கலைக்கழகம் அன்பளிப் பாக 30000 டொலர்களை இவருக்கு வழங்கியுள்ளது.

இத்தகைய ஆவணங்களை டிஜிட்டலைஸ் செய்தால் தாயகத்திலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு கொடுக்கலாம் என்பதால் அதற்கான பணியை ஆரம்பித்தார். அதற்கு 50000 டொலர்கள் செலவாகும் என கணிப்பிடப்பட்டது.

அதற்கான பணத்தை சேர்ப்பதற்கு முன்னரே, பணிகளை நிறைவுசெய்து யாழ் பல்கலைக்கழககலைப்பீடாதிபதியை வரவழைத்து, அவரிடம் பிரதியை அன்றைய தினமே கையளித்து, மூலப்பிரதியை தமிழ்ச்செயற்பாட்டாளரான சஞ்சயன் அவர்களிடமும், உத்தியோகபூர்வமாக கையளித்து அன்றையதினம் அப்பணியை நிறைவுசெய்தார்.

நிகழ்வின் இறுதியில் பேசும்போபோது, தான் இப்போது வானத்தில் பறப்பது போல சுமையை இறக்கிவைத்துவிட்டதாக உணர்வதாக மனம் திறக்கின்றார் பேராசிரியர் குணசிங்கம் அவர்கள்.

நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய பேராசிரியர் சிவநாதன், இத்தகைய வரலாற்றுப்பொக்கிசம் தமக்கு கிடைத்தமை பெரிய பேறு என்றார். தமிழர்களின் வெளிச்சத்திற்கு வராத வரலாறுகள் விரைவில் வெளிவரும் காலம் வரும் என நம்பிக்கை வெளியிட்டார்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வந்திருந்த, கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவருகின்ற லிபாரா நூலகத்தின் ஒருங்கிணைப்பாளர் வண. பிதா ஜேசுதாசன் தனதுரையில் தமிழ்மொழிக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், பேராசிரியர் குணசிங்கம் அவர்கள் போன்று இன்னும் பலர் உருவாகவேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

ஆனால் இத்தனை முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக்கு 100 பேர் அளவில் மட்டுமே பங்குகொண்டிருந்தமை கவலை தருவதாகவிருந்தது. பலருக்கு இந்நிகழ்வு நடைபெற்றது தெரிந்திருக்கவில்லை. தாயகத்திலிருந்து இதன் முக்கியத்துவம் கருதி இரண்டு முக்கிய பிரமுகர்கள் வந்திருந்தார்கள்.

எது எப்படியிருந்தபோதிலும் விடாமுயற்சியுடன் அடுத்த பணியை ஆரம்பித்துவிட்டார் பேராசிரியர் குணசிங்கம் அவர்கள். உலகத்தமிழர்களின் வரலாறு பற்றி பதிவு செய்யும் பெரிய பணியில், தனது பயணத்தை தொடங்கிவிட்டார். இவரது அடுத்த வேலைத்திட்டம் இதுதான். இப்பொறுப்பினை பழ. நெடுமாறன் அவர்களே அவருக்கு கொடுத்துள்ளார். ஆம் விடுதலையை நேசிப்பவர்கள் ஓடிக்கொண்டேயிருப்பார்கள் இலக்கையடையும்வரை.



# லிபரலின் ஆட்சியில் அகதிகள் கதி என்ன?

புதிதாகப்பதவியேற்றுள்ள ரொனி அபொட்டின் லிபரல் அரசு ஆஸ்திரேலியாவை பிடரியில் பிடித்து உலுப்பும் அகதிகள் பிரச்சினைக்கு எவ்வாறான - நடமுறைக்கு சாத்தியம் மிக்க - தீர்வுகளை வழங்கப்போகிறது என்பது குறித்த ஆர்வம் சாதாரண பொதுமகன் முதல் அரசியல் மட்டங்கள்வரை மிகுந்த ஆர்வத்தை கிளப்பிவிட்டுள்ளது. “இதுவெல்லாம் ஒரு பிரச்சினையா” என்று முகம் திருப்பிக்கொள்ளும் விடயமாக - சாதாரணமாக கருதப்படக்கூடிய அகதிகள் பிரச்சினை, ஆஸ்திரேலியாவை பொறுத்தவரை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது நடந்து முடிந்த தேர்தலில் லேபர் மற்றும் லிபரல் கட்சிகள் நடத்திய “நாகரிகம் மிக்க” குடுமிப்பிடிச்சண்டையில் மிகத்தெளிவாகவே தெரிந்தது.

ஆட்சிக்கட்டிலுக்கும் வரும்முன்னர் வீராவேசப் பேச்சுக்க ளும் தேர்தல் வாக்குறுதிகளும் பேசவும் கேட்கவும் நன்றா கத்தான் இருக்கும். ஆட்சி அமைத்த பின்னர் என்ன நிலைவரம் என்பதுதான் நடைமுறை ரீதியான அணுகுமுறைகளுக்கு தகுந்த தீர்வுகளாக அமையும். அந்த வகையில் கடலில் தத்தளிக்கும் அகதிகளை விடவும் அதிகமாக அரசியலில் தத்தளித்துக்கொண்டிருக்கும் ஆஸ்திரேலிய அரசின் அகதிகள் பிரச்சினைக்கு, டொனி அபொட் எடுக்கப்போகும் தீர்வுப்படிகள் என்ன?

அகதிகள் விவகாரத்தில் இரும்பு மனிதராக வர்ணிக்கப்பட்ட முன்னாள் பிரதமர் ஜோன் ஹவார்ட்டின் கொள்கைகளை மீள அமுல்படுத்துவதன் ஊடாகவும் இந்தோனேஷிய அரசுடன் செய்துகொள்ளப்போகும் சில உடன்பாடுகளின் ஊடாகவும் தமது அரசு அகதிகளின் வருகையை குறைக்கப்போவதாக கூறிய லிபரல் கட்சி, தற்போது அது குறித்து விலாவாரிய பேசத்தொடங்கியுள்ளது. அவ்வாறு பேசத்தொடங்கியதுதான் மாத்திரம், லிபரல் கட்சியை பல தரப்புக்களும் அர்ச்சனை செய்ய ஆரம்பித்துவிட்டன.

அப்படியாயின், அகதிகள் விவகாரத்துக்கு தீர்வு காணப்பதற்கு லிபரல் அரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

1) முன்னர் ஹவார்ட் அரசு நடைமுறைப்படுத்தியிருந்த தற்காலிக பாதுகாப்பு விஸா நடைமுறையை மீண்டும் அமுல் படுத்துதல்

1999 இல் லிபரல் கட்சியால் கொண்டுவரப்பட்ட இந்த விஸ ா நடைமுறை 2007 இல் லேபர் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் 2008 ஒகஸ்ட்டில் இல்லாதொழிக்கப்பட்டது. இந்த தற்காலிக பாதுகாப்பு விஸா நடைமுறையின் கீழ் ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக வரும் நபர் ஒருவர் அகதி என்று அங்கீகரிக்கப்பட்டால், அவருக்கு தற்காலிக பாதுகாப்பு விஸா வழங்கப்படும். அந்த விஸாவுடன் ஆஸ்திரேலியாவில் அவர் வாழும் காலப்பகுதியில் அவருக்கு வேலை செய்யும் அனு-மதியோ தனது குடும்பத்த அங்கத்தவர்களை இந்த நாட்டுக்கு அழைக்கும் அனுமதியோ, வெளிநாடுகளுக்கு பயணம் செய்யும் அனுமதியோ எதுவும் வழங்கப்படமாட்டாது.

அவருக்கு நிரந்தர வதிவிட உரிமையை வழங்கலாம் என்று குடிவரவு திணைக்களம் சட்டபூர்வமாக திருப்திவெளியிட்டால், அதன் பின்னர் அவர் இந்த நாட்டில் நிரந்தரமான தங்குவதற்கான உரிமையை பெற்றுக்கொள்வார். இதற்கான காலப்பகுதி மாதங்கள், வருடங்கள்கூட ஆகலாம்.

ஹவார்ட் அறிமுகப்படுத்திய இந்த இந்த இறுக்கமான விஸா நடைமுறை அகதிகளின் வருகை குறைவதற்கான பிரதானமான ஒரு காரணியாக கருதப்பட்டாலும், இவ்வாறு தற்காலிக பாதுகாப்பு விஸாவை பெற்றுக்கொண்டவர்களில் 90 சதவீதமானவர்கள் நிரந்தர வதிவிட விஸாவை பின்னர் பெற்றுக்கொண்டார்கள் என்று நாடாளுமன்ற புள்ளிவிவரங்கள் தெரிவித்துள்ளன.

2) அகதிகளாக அங்கீகரிக்கும் செயன்முறையை ஆஸ் திரேலிய குடிவரவு எல்லைக்கு வெளியில் நிலைப்படுத்துதல்.

ஆஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக வருபவர்கள் உண்மையிலேயே அகதிகள்தானா என்பதை உறுதிப்படுத்தும் செயன்முறை ஆஸ்திரேலியாவின் குடிவரவு ஆட்புல எல்லைக்கு வெளியில் மானஸ் தீவுகள் மற்றும் நவுறு தீவு ஆகிய இடங்களிலேயே நடைபெறும். அங்கு நடைபெறும் குடிவரவு திணைக்களத்தின் செயன்முறையில் அகதிக-ளாக உறுதிப்படுத்தப்படுபவர்கள் தற்காலிக பாதுகாப்பு விஸா வழங்கப்பட்டு ஆஸ்திரேலியாவுக்குள் கொண்டுவரப்படுவார்கள். அகதி அந்தஸ்து நிரகாரிகப்படுபவர்கள் மீண்டும் அவர்களின் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள்.

3) ஆஸ்திரேலியாவை நோக்கி அகதிகளுடன் வரும் படகுகளை கண்காணித்து, அவற்றை மீண்டும் அவை புறப் பட்ட இடத்துக்கே திருப்பி அனுப்புவதற்கு சிறப்பு அதிகாரங்கள் கொண்ட கட்டளை தளபதி ஒருவரின் கீழ் கரையோர பாதுகாப்பு நடவடிக்கை அணி ஒன்றை உருவாக்குதல்.

மத்திய கிழக்கில் பணியாற்றிய ஆஸ்திலேய படைகளின் பிரதானி அங்கஸ் கம்பல் இந்த பணிக்காக நியமிக்கப்பட்டு அவருக்கு முன்று நட்சத்திர படை அந்தஸ்துடைய ஜெனரல் பதவியும் வழங்கப்பட்டுள்ளது. இவர் ஆஸ்திரேலியாவின் எந்த படைக்கட்டமைப்பினதும் உத்தரவுகளை கேட்டு முடிவெடுக்கவேண்டிய அவசியமில்லை. நேரடியாக குடி-வரவு அமைச்சரின் கீழ் இயங்கும் சிறப்பு தளபதியாக தனது பணியை மேற்கொள்வார். இவரது பணிக்கு தேவையான உதவிகளை ஆஸ்திரேலியாவின் 16 அரச திணைக்களங்கள் வழங்குவதற்கான உத்தரவை குடிவரவு அமைச்சர் வழங் கியுள்ளார்.

4) ஆஸ்திரேலியாவுக்கு ஆட்களை கடத்தும் பிரதான தளமாக ஆஸ்திரேலியா கருதும் இந்தோனேஷியாவிலிருந்து அகதிளை தாங்கிய படகுகள் புறப்படும் முன்னர் அவற்றை தடுக்கும் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்துதல்.

இந்தோனேஷியாவிலிருந்து பெரும் எண்ணிக்கையிலான ஆட்கடத்தல்காரர்கள் அகதிளை பெரும் எண்ணிக்கையில் ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றி அனுப்புவதால், இது குறித்த தக வல்களை முன்கூட்டியே தமக்கு தெரிவிக்கும் ஒற்றர்களுக்கு சன்மானம் வழங்கி ஊக்குவிப்பதன்மூலம் “வருமுன் தடுப்போம்” என்ற தடையை ஏற்படுத்துவது.

அத்துடன், இந்தோனேஷியாவில் பயன்பாட்டுக்கு உதவாது என கழிக்கும் படகுகளை ஆட்கடத்தலுக்கும் உபயோகிப்பதற்கு முன்னர், அவற்றை தமது முகவர்கள் ஊடாக ஆஸ்திரேலிய அரசு கொள்முதல் செய்தல்.

இவைபோன்ற - “நடைமுறைக்கு சாத்தியமானதாக” தாம் கருதும் - கொள்கைகளை நடைமுறைப்படுத்தப்போவதாக ரொனி அபொட்டும் அவரது அமைச்சர்களும் வேட்டியை மடித்துக்கட்டிக்கொண்டு கிறிஸ்மஸ் தீவுக்கடற்கரையில் போய் நின்று காவல் காக்காத குறையாக சூளுரைத்துள்ளனர்.

கன்பராவிலிருந்து நூற்றுக்கணக்கான பக்கங்களில் கொள்கைகளை பிரகடனங்கள் செய்தாலும் கிறிஸ்மஸ் தீவுகளில் உள்ள கடற்படை அதிகாரிக்குத்தான் அவற்றின் தாற்பரியம் புரியும். அதைத்தான் தற்போது ஊடகங்களும் எழுதத்தொடங்கியுள்ளன.

ஜோன் ஹவார்ட் காலப்பகுதியில் ஆப்கான் போரோ சிறிலங்காவில் இடம்பெற்றதுபோன்ற மனிதப்படுகொலைகளோ அல்லது இவை போன்ற படுகொலை படலங்கள் பாரிய அளவில் உலக அளவில் இடம்பெற்றது கிடையாது. அந்தக்காலப்பகுதியில் அவர் நடைமுறைப்படுத்திய அகதிகள் கொள்கைக்கு கிடைத்த பயன் என்பது காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதைதான். ஆனால், தற்போது உலக அளவில் இடம்பெறும் போர்கள் மற்றும் கலவரங்கள், மனிதஉரிமை மீறல்கள் என்பவலை சொல்லொணா துயரங்கள் மிக்க இரத்தப்படலங்கள்.

சிறிலங்காவில் போர் முடிவடைந்ததாக கூறப்படும் மகிந்த சிந்தனைகள், இராஜதந்திர முலாம் பூசிய வர்த்தகங்களை மேற்கொள்வதற்கு வேண்டுமானால் வசதியாக இருக்க லாம். ஆனால், அங்கு இடம்பெறும் படிப்படியான இனச்சுத் திகரிப்பையும் தேசிய இனம் ஒன்றின் மீதான இனவாத ஆக்கிரமிப்பையும் நோக்கி ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் தொடர்ந்தும் பாரமுகமாக இருக்கப்போவதானால், இத்தகைய அகதிகளின் வருகை இன்னும் இன்னும் அதிகரிப்பதை தடுக்கமுடியாது.

அதேபோல, தற்போது சிரியாவில் இடம்பெறும் பாரிய கலவரத்தை காரணம் காண்பித்து அங்கு காலூன்றத்துடிக்கும் அமெரிக்காவின் அங்கலாய்ப்புக்கு சாமரம் வீசும் ஆஸ்திரேலியா அதற்குரிய விலையை பெருந்தொகைளான அகதிகளின் வடிவில் மிகவிரைவில் பெற்றுக்கொண்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

அதேபோல, லிபரல் கட்சியின் அகதிகள் கொள்கை தொடர்பான பூர்வாங்க அறிவிப்புக்கு இந்தோனேஷியா விலிருந்து கிளம்பியுள்ள எதிர்ப்பு மிகக்கடுமையானதாக காணப்படுகிறது. இந்தோனேஷியாவில் சென்று பழைய படகுகளை வாங்குவது என்றும் ஒற்றர்களை பணிக்கு அமர்த்தி அவர்களுக்க சன்மானம் வழங்குவது என்றும் லிபரல் கட்சியினர் வெளியிட்ட கருத்துக்களுக்கு இந்தோனேஷ ியாவின் ஒரு அமைச்சர் விடாமல் அனைவரும் ஆஸ்திரேலிய ஊடங்களில் பாய்ந்து வந்து சரமாரியாக தமது கண்டனங்களை தெரிவித்துள்ளார்கள்.

“இந்தோனேஷிய இறைமையுள்ள ஒரு நாடு. இன்னொரு நாடு தனது உள்நாட்டு பிரச்சினையை தீர்க்கமுடியாமல் எமது நாட்டில் வந்து ஆட்களை வாங்குவது என்றும் பழைய படகுக-ளை வாங்குவது என்றும் கொள்கைளை எம்மில் திணிப்பது எமது நாட்டின் இறைமையையும் ஆட்புல ஒருமைப்பாட்டையும் மீறும் செயலாகும். ஆஸ்திரேலியா எம்மோடு கலந்தா லோசிக்கமால் எதேட்சதிகாரப்போக்குடன் விட்டேந்தி தனமாக விட்டுக்கொண்டிருக்கும் அறிக்கைகளுக்கும் அவர்களின் கொள்கை அறிவிப்புக்களுக்கும் எமது நாடு இடமளிக்கப்போவதில்லை என்று நெத்திப்பொட்டில் அடித் தாற்போல் இந்தோனிய அரசு அறிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, எதிர்வரும் செப்டெம்பர் 30 ஆம் தி-கதி பிரதமர் டொனி அபொட் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் ஆகியோர் இந்தோனியாவுக்கு செல்லவுள்ளனர். பிராந்திய உறவு நிலை குறித்து புதிய அரசு நடத்துவுள்ள வழக்கமான இந்த சந்திப்பில் மிகப்பிரதானமாக அகதிகள் விவகாரமே பேசப்படவுள்ளதாக அரச தரப்பு தெரிவித்துள்ளது.



இந்த சிக்கல்களுக்குள் எல்லாம் முக்குளித்து எழுந்தால் மாத்திரமே லிபரல் கட்சி அறிவித்துள்ள அதன் கொள்கைகளுக்கு நடைமுறையில் செயன்முறை வடிவம் கிடைக்கும். அதற்கு பயனும் கிட்டும்.

இந்த களேபரங்கள் ஒரு புறமிருக்க -

புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் ஊடகங்களால் உறுதிப்படுத்தப்பட்டவரை சுமார் 500 அகதிகள் படகுகள் மூலம் கிறிஸ்மஸ் தீவுகளுக்கு வந்துள்ளார்கள். ஆனால், கடந்த சில வாரங்களாக அகதிகளின் வருகை குறித்து எந்த தகவலும் ஊடகங்களுக்கு கிடைக்கவில்லை. குறிப்பிட்ட அரச தரப்புக்களுடன் தொடர்புகொண்டு இது குறித்து கேட்டதற்கு அவர்கள் எந்த தகவலையும் வழங்க மறுக்கிறார்கள் என்று முன்னாள் குடிவரவு அமைச்சர் டொனி பேர்க் அண்மையில் தெரிவித்துள்ளார்.

அகதிகளின் வருகை தமது ஆட்சியில் இல்லை என்பது போன்ற ஒரு கீழ்த்தரமான - இரகசியம் பேணும் - நடவடிக்கையை லிபரல் அரசு கடைப்பிடிப்பதாகவும், ஊடகவியலளர்கள் தன்னை தொடர்புகொண்டு இது குறித்து கேட்பதாகவும் தெரிவித்துள்ளார்.

டோனி பேர்க்கின் இந்த கருத்தினை அரசு தரப்பு மறுத்துள்ளபோதும் கடந்த சில வாரங்களாக இடம்பெற்ற அகதிகளின் வருகை குறித்தோ அது குறித்த விவரங்கள் குறித்தோ இதுவரை எதுவும் வாய்திறக்கவில்லை.

ஈழமுரசு

# கூட்டமைப்பின் வெற்றியைத் தடுக்க அரங்கேறிய கூத்துக்கள்

## தாயகத்திலிருந்த வில்லங்கள்

"வடக்குத்தேர்தலில் கூட்டமைப்புத்தான் வெற்றிபெறும்" என்று அரசுத்தரப்புக் கூட 'பெருந்தன்மையோடு' தேர்தலுக்கு முதல் நாள்வரை சொல்லிக் கொண்டிருந்தாலும், எப்படியாவது தலையை அடகுவைத்தாவது வெற்றியைத் தன்வசமாக்க முடியாதா என்ற ஏக்கத்துடன் அது செய்த தில்லுமுல்லுகள் ஏராளம். இவற்றில் வெகு சிலவே தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்ட அமைப்புகளின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. ஏராளமான அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், சிறு சிறு தாக்குதல்கள் என்பன உலகின் கண்களுக்கு மறைக்கப்பட்டிருந்தன. இந்த முயற்சியில் தமிழ்த்தேசியத்தில் அக்கறை கொண்ட ஊடகங்களும் மறைத்திருந்தன. ஏனெனில் அச்சுறுத்தலான சூழல் நிலவுகிறது என்ற எண்ணம் பொதுமக்கள் மனதில் ஏற்பட்டிருந்தால், இப்படி அலை அலை யாக வந்து வாக்களித்திருக்கமாட்டார்கள். செப்ரெம்பர் 21 ஆம் திகதி வாக்களிப்பில் தமிழ் மக்கள் காட்டிய அக்கறையும், திரள் திரளாக வந்து வரி சையில் நின்று வாக்களித்து கிட்டத் தட்ட 70 வீதமான வாக்குகளைப் பதிவுசெய்திருக்க மாட்டார்கள் வழ மைபோலவே " நமக் கென்ன? எங்கட பாட்டில இருப்பம். மற்றவை போய் வோட் போடுவினம் தானே நான் ஒரு ஆள் போடாட்டி என்ன குடியா முழுகிப்போடும்" என்று வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லாமலே இருந்து விடுகிறார்கள். எனவே இயல்பாகவே மக்களிடம் உண்டாகியிருந்த உரிமைக்கு குரல் கொடுப்பது பற்றிய எழுச்சியை அணைந்து விடச்செய்வதற்கு ஊடகங்களும் தயாராகவில்லை. எனவே கண்ணுக்குத் தெரி யாமல் நடந்தேறிய அரச கட்சியின் தில்லு முல்லுகளை மக்களிடையே பரவவிடா மல் கண்காணிப்பாளர்களும், ஊடகங்களும் சுயதணிக்கையை மேற்கொண்டிருந்தன. இப்போது தேர்தல் நடந்து முடிந்த நிலையில், கூட்டமைப்பு 80 வீதமான வாக்குகளை அள்ளியெடுத்து ஆட்சியில் அமர்ந்துவிட்ட நிலையில், கடசிநேரத்தில் நடந்த சில தேர்தல் கூத்துகளையும் அவற்றுக்கான பின்னணிக்காரணங்களையும் கொஞ்சம் இங்கு அலசவேண்டியது அவசியமாகின்றது. ஏனெனில் அப்போதுதான் அடுத்தமுறையும் இதுபோன்ற அச்சுறுத்தல்களை எதிர் கொண்டாலும் துணிச்சலுடன் சமாளித்து, எங்கள் உரிமைக்கான போராட்டத்தை நாம் தொடரமுடியும்.



### கூத்து-1

அனந்தி சசிதரன். மேலோட்டமாகப் பார்க்கும் போது, கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்டத்தில் களமிறக்கப்பட்ட ஒரே-யொரு பெண் வேட்பாளர் என்றே வெளி யில் இருந்து பார்ப்பவர்கள் அனந்தியை அடையாளப்படுத்தியிருந்தனர். அதற்குமப்பால் அனந்திக்கு இன்னும் சில அடையாளங்கள் இருந்தன. விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக இருந்த எழிலனின் மனைவிதான் அனந்தி. இறுதிப்போரில் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்பு, எஞ்சியிருந்த போராளிகளைப் பத்திரமாக சரணடையச் செய்து, அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சில பொறுப்பாளர்கள் அவர்களுடன் வெள்ளைக்கொடியேந்தியபடி நந்திக்கடல் பாலத்தடியில் சரணடைந்திருந்தனர். இதன் போது தன் கைகளாலேயே, கணவரை (எழிலனை) படையதிகாரிகளிடம் கொடுத்துவிட்டு வந்தவர். அதிகாரிகளே நேரில் வந்து தன் கணவரை கையேற்றதால் அவர் விரைவில் வந்துவிடுவார் என்ற நம்பிக்கையுடன் நலன்புரிநிலைய வாசலில் வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தார். எழிலன் நான்கு வருடங்கள் கழிந்தும் வரவேயில்லை. கணவரை மீட்க தன்னைப்போலவே கலங்கிக் கொண்டிருக்கும் காணாமல் போனோ ரின் உறவுகளையும் இணைத்துக் கொண்டு களமிறங்கினார். பல்வேறு அகிம்சைப்போராட்டங்கள் வடக்கின் பாகங்களில் முளைகொண்டன. இந்த நிலையில் தான் அவர் யாழ். மாவட்டத்தில் கூட்டமைப்பால் களமிறக்கப்பட்டார்.

மாகணசபை வேட்பாளர்களில் விக்னேஸ்வரனுக்கு அடுத்ததாக எல்லோரது கவனத்தையும் ஈர்த்தவர் அனந்தி. அவர் காணாமல் போனோர் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள், சர்வதேசத்தின் கவனத்தை மீண்டும் இலங்கை மீது திருப்பமுற்பட்டதால், அந்த ஆத்திரமெல்லாவற்றையும் அனந்தி மீது காட்ட முற்பட்டது சிங்களம். அவரது கணவரை வசைபாடி, மஹிந்த ராஜபக்ஷவின் ஊடக இணைப்பாளர் வாரம் ஒரு அறிக்கையை வெளியிடத்தொடங்கினார். இன்னொரு புறத்தில் அனந்தி அரசின் பக்கம் தாவிவிடுவார் என்ற வதந்தியும் இராணுவப்புலனாய்வாளர்களால் திட்டமிட்டு பரப்பப்பட்டது. "பெண்புலி அனந்தியை பிடித்து தடுப்புக்கு அனுப்ப வேண்டும்: என்று பேரி-னவாதிகள் காட்டுக்கூச்சல் போடத்தொடங்கினர். இந்தக்கூச்சலும், அனந்திக்கு எதிரான அரசின் அவதூறுத்தாக்குதலும் நாளொரு மேனியும் அதிகரிக்கத்தொடங்கின. காரணம், மக்களிடையே அனந்திக்கு ஆதரவாக உருவா-கத் தொடங்கிய அனுதாப அலைதான்.

இந்த நிலையில் தான் அனந்தி மீதான நேரடித்தாக்குதலை நடத்துவதென அரச புலனாய்வாளர்களும், ஈ.பி.டி.பியினரும் இணைந்து முடிவெடுத்தனர்.

அன்றைக்குத்தான் பிரசாரங்கள் ஓய்ந்திருந்தன. தேர்தல் வேலைகள் தொல்புரம் வழக்கம்பரையில் உள்ள அனந்தி வீட்டில் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது, ஈ.பி.டி.பிக்கு ஆதரவாக செயற்பட்டுக்கொண்டிருந்த கஜன், அருண கிரி, சகிலன் என்போர் உள்ளிட்ட சிலர் வழமைக்கு மாறான முறையில் அனந்தியின் வீட்டுக்கு முன்னால் நோட்டமிடும் வகையில் நடமாடதொடங்கினர். மாலைக்கருக்கலில் மோட்டர் சைக்கிளில் வந்த இந்த ஈ.பி.டி.பி வால்பிடிகள், அனந்தியின் பெயரைக் குறிப்பிட்டு சிங்களத்தில் தகாத வார்த்தைகளால் கத்தியபடி ஓடினர். அத்தோடு பிரச்சினை ஓய்ந்திருந்தால் பரவாயில்லை.

அதன் பின்னர் சில மணித்தியாலங்கள் கழித்து, ஒரு மோட்டார்சைக்கிள் அனந்தியின் வீட்டுக்கு அருகே வந்து நின்றது அதிலிருந்து இறங்கியவர்கள் போன் கதைப்பது போல, யாருக்காகவோ காத்திருந்தார். சில நிமிடங்களில் கால்நடையாக சுமார் இருபது சிப்பாய்கள் வந்து சேர்ந்தனர். அவர்களில் அநேகர் சிவில் உடையில் இருந்தனர். கைகளில் ஆயுதங்களோடு வந்த இவர்கள், அனந்தியின் வீட்டைச் சுற்றி வளைத்து நின்றனர். வீட்டில் இருந்தவர்களுக்கு ஏதோ விபரீதம் நடக்கப்போவது புரிந்துவிட்டது. எனவே




அவர்கள் வெளிப்புறத்தில் இருப்பதை தவிர்த்து, உள்ளே சென்று அமர்ந்து கொண்டனர். அப்படி இருந்தும் இராணுவத்தினர் அங்கிருந்து அகல்வதாகத் தெரியவில்லை.

இனியும் வாளாவிருந்தால் பெரும் அனர்த்தம் நிகழ்ந்துவிடும் என்ற பயத்தில் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகங்கள், தேர்தல் கண்காணிப்பகங்கள் என்பவற்றுக்கு தொலைபேசி மூலம் தகவல் பறந்தது. உடனடியாகவே பத்துப்பதினைந்து கூட்டமைப்பு ஆதரவாளர்கள் அனந்தியின் வீட்டுக்கு விரைந்தனர். அவர்களின் மோட்டார் சைக்கிள்கள் வருவதை அவதானித்த படைத்தரப்பு, உடனடியாகவே அந்த இடத்தைவிட்டுக் கலைந்தது.

'வழமை போலவே வெருட்டுவதற்குத்தன் இப்படிச் செய்திருக்கிறார்கள்' என்று அனந்தியின் ஆதரவாளர்கள் தமக்கிடையே பேசிக் கொண்டார்கள். நிலைமையின் தன்மையை அறிந்து கொள்வதற்காக நள்ளிரவென்றும் பாராது சம்பவ இடத்துக்கு வந்து சேர்ந்த 'பவ்ரல்' அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி சுகாஷ், அங்கிருந்தவர்களிடம் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டிருந்தார். அப்போதுதான் இருளைக் கிழித்துக்கொண்டு நான்குக்கும் மேற்பட்ட வாகனங்கள் ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சியபடி அனந்தியின் வீட்டு வாசலில் வந்து நின்றன. வாகனங்கள் நிற்கமுதலே அதிலிருந்து 'திபு திபு' எனக் குதித்த 50க்கும் மேற்பட்டவர்கள் கைகளில் கொட்டன்களுடனும், வாய் நிறையச் சிங்களத்தூஷண வார்த்தை களுடனும் வெறிகொண்டவர்கள் போல வீட்டுக்குள் பாய்ந்தனர். கையில் பட்டவர்களையெல்லாம் அடித்து நொருக்கிக் கொண்டே உள்ளே நுழைந்தவர்களின் கண்கள், அனந்தி எங்கிருக்கிறார் என்று தேடிக்கொண்டேயிருந்தன. எங்கும் கூச்சலும் ஓலமும். வந்தவர்களின் கண்களுக்கு அங்கிருந்த எல்லோருமே அனந்தியின் ஆதரவாளர்களாகவே தெரிந்தனர்.

பவ்ரல் அமைப்பும் இந்த வெறித்தாக்குதலில் இருந்து தப்பவில்லை.

"நான் கூட்டமைப்பில்லை. பவ்ரல் அமைப்பில் இருந்து வந்தனான்" என்று அந்தக்ம் களேபரத்துக்கு மத்தியிலும் தனது அடையாளத்தை சுகாஷ் வெளிப்படுத்திய போதும், இன்னும் மோசமாகத்தாக்கப்பட்டார். பூட்ஸ் கால்களும், கொட்டன்களும் அவரது முதுகெங்கும் விளையாடின. என்றாலும் வந்தவர்களுக்கு இன்னும் வந்த நோக்கம் நிறைவேறவில்லையே. வீட்டின் ஒவ்வொரு அறையையும் காலால் உதைத்துத் திறந்து தேடினர். அனந்தி எங்கும் இல்லை. இப்படி ஒரு தாக்குதல் தன்னை இலக்கு வைத்து நடத்தப்படலாம் என்பதை ஓரளவு ஊகித்திருந்த அனந்தி, தேர்தல் நெருங்கியிருந்த சமயத்தில் வேறொரு இடத்திலேயே பாதுகாப்பாக தங்கியிருந்தார். இது கூலிக்கு மாரடிக்க வந்த சிவில் உடைப்புலனாய்வாளர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. அதை விடவும் இன்னொரு சந்தேகமும் அவர்களுக்கு எழுந்தது. அவர்களுக்கு கிடைத்த தகவலின்படி, அனந்தியின் வீட்டில் இருபதுக்கும் குறையாத எண்ணிக்கையான ஆதரவாளர்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால் நின்றதோ வெறும் ஏழெட்டுப் பேர்தான். மிச்சப்பேர் எங்கே என்ற கேள்வி அவர்களுக்கு இருக்கவே செய்தது. வீட்டை அலசி ஆராய்ந்து, அனந்தியும் மேலதிக ஆதரவாளர்களும் இல்லை என்று முடிவு செய்து கொண்டு அவர்கள் திரும்ப நினைத்த சமயத்தில். 'சலீர்' என்று ஒரு சத்தம்.

சத்தம் வந்த திசைக்கு ஓடினான் ஒரு புலனாய்வாளன். அங்கே- வீட்டின் மேற்புற சீற் ஒன்று உடைந்து போயிருக்க, அதற்குள் ஒளிந்திருந்த கூட்டமைப்பு ஆதரவாளர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் முழுசிக்கொண்டிருப்பது தெரிந்தது. அத்தனை பேரும் கீழிறக்கப்பட்டு, ஆத்திரம் தீரும் வரை அடித்து நொருக்கப்பட்டனர். வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டைருந்த மோட்டார் சைக்கிள், ஓட்டோ என்பவற்றின் ரயர்களையும் வெட்டிச் சரித்த பின்னே அவர்கள் 'அனந்தியைக் கொல்லமுடியவில்லையே' என்ற ஏமாற்றத்தோடு தங்களை ஏவிவிட்ட இடத்துக்கே திரும்பிச் சென்றனர்.

கூட்டமைப்பின் மிக முக்கிய வேட்பாளரைக் கடத்துவது அல்லது கொல்வது என்பதே தாக்குதலாளிகளின் நோக்கம். இதன்மூலம் ஒரு அச்ச அலையை உருவாக்கி ஒட்டு மொத்த மக்களையும் குழப்பி தேர்தலை நடத்தவிடாமல் செய்வதே, திட்டமாக இருந்திருக்க வேண்டும்.

### கூத்து-2

தேர்தல் பிரச்சாரங்கள் புதன்கிழமை நள்ளிரவுடன் முடிவுக்கு வரவேண்டும் என்று தேர்தல் திணைக்களம் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்த போதும், அரச ஆசிர்வாதத்தோடு களமிறங்கியவர்கள் புதன் கிழமைக்குப் பின்னர்தான் தீயாக வேலை செய்யத்தொடங்கினார்கள். உண்மையில் இவர்கள் அரச ஆசீர்வாதம் பெற்றவர்கள் என்பதை விடவும் ஆமி யின் ஆசீர்வாதம் பெற்றவர்கள் என்பதுதான் உண்மை. நெல்லியடி வர்த்தகர் அகிலதாஸ், சாவகச்சேரி சர்வா, இரும்பு வியாபாரி ஷி ராஸ் ஆகியோர் படைப்புலனாய்வாளர்களால் களமிறக்கப்பட்டவர்களில் முக்கியமானவர்கள்.

இவர்களுக்கு தேர்தல் பணிபுரிய இராணுவப் பிரிவொன்றே களத்தில் இறங் கியது. இரவு நேரங்களில் ஒவ்வொரு படை முகாமில் இருந்தும் ரோந்துக்குச் செல்லும் இராணுவத்தினர் குறைந்தது ஆயிரம் நோட்டீஸ் ஒட்டவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டது. இந்த மும்மூர்த்திகளின் (அகிலன், சர்வா, ஷி ராஸ்) தேர்தல் வாகனங்கள் எந்த அனுமதியும் இல்லாமல் எங்கும் எத்தனையும் செல்லலாம். அதற்கும் இராணுவப்பாதுகாப்பு வழங்கப்பட்டது. இராணுவ முகாமுக்கு அண்மையாக உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு திடீரென சுயதொழில் கடனாக பத்தாயிரம் வாங்கப்பட்டது. இதற்கான பணம் கூட வடமா-காண நிதியில் இருந்து கொடுக்கப்பட்டது.

கடன் பெற்றவர்கள் படைப்புலனாய்வாளர்க ளால் களமிறக்கப்பட்ட மும்மூர்த்திகளுக்கு வாக்களித்து வெற்றி பெறச்செய்தால் அவர்களின் கடன்கள் இரத்துச் செய்யப்படும் என்று ஆசையூட்டப்பட்டது. இரவிரவாக தேர்தலுக்கு முந்திய நாள் வரை இந்த மும்மூர்த்திகளினதும் பிரசுரங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சகல வீடுகளுக்குள் போடப்பட்டிருந்தது. கோடிக் கணக்கில் அரசநிதி செலவிடப்பட்டு இவர்களை வெல்லவைக்க படைத்தரப்பு போராடிக் கொண்டிருந்தது.

"நாங்கள் இறக்கிய வேட்பாளர்கள் தோற்கக்கூடாது" என்று சிப்பாய்கள் சிலர் வெளிப்படையாக மக்களிடம் சொல்லவும் செய்திருக்கிறார்கள். ஆனாலும் கடைசியில் எல்லா அச்சுறுத்தல்களும் மக்கள் தீர்ப்புக்கு முன்னால் அடங்கித்தான் போயின.

### கூத்து-3

என்னதான் விமர்சனங்கள் பல இருந்தாலும், யாழ்ப்பாணத்தில் அதிக எண்ணிக்கையில் விற்பனையாவதும், தீவிர தமிழ்த்தேசியக்கருத்துக்களைக் கொண்டதும் உதயன் பத்திரிகைதான். அதிலும் குறிப்பாக தேர்தல் நாளன்று உதயன் போடுகின்ற செய்திகள் சும்மயிருக்கும் வாக்காளர்களையும் உசுப்பேற்றி, தேசியத்துக்கு ஆதரவாக வாக்களிக்கப் பண்ணுவது படைத்தரப்புக்கும் நன்கு தெரியும்.

எனவே இந்தமுறை வித்தியாசமான முறையில் தாக்குதல் நடத்த முடிவு செய்யப்பட்டது. அதுவும் எந்த உதயன் மக்களை தேசியத்துக்கு ஆதரவாக எழவைக்கிறதோ, அதே உதயனை வைத்து, மக்களைக்குழப்ப முடிவு செய்யப்பட்டது. இதற்கு மூளையாக இருந்தவர் தன்னைத்தானே 'நடுநிலையான ஊடகவியலாளர், ஊடக ஆய்வாளர்' என்று சொல்லிக் கொள்பவரும், ஈ.பி.டி.பி சார்பில் வடக்கு மாகாணத்தேர்தலில் நின்றவருமான கோ.றுஷாங்கன். ஏற்கனவே இவர் டான் தொலைக்காட்சியில் தினமும் தோன்றி பத்திரிகைக் கண்ணோட்டம் என்ற பெயரில், உதயன் பற்றிய தவறான கருத்துக்களை மக்களிடையே பரப்ப பகீரதப்பிரயத்தனம் செய்திருந்தார். அதை விட ஈ.பி,டி.பி.யின் தினமுரசுப் பத்திரிகையில் 'புலிகளை அழித்த ஊடகங்கள்' என்ற தொடர் கட்டுரையை வே.அர்ச்சுணன் என்ற பெயரில் எழுதி வருகிறார். இவர் யாழ்.மாவட்ட முன்னாள் தபாலதிபர் கோடீஸ்வரனின் மகன். தினக்கதிர் என்ற பத்திரிகையை மட்டக்களப்பில் நடத்தியவர். பின்னர் ஒரு பிரச்சினையில் கருணா அதை எரிக்க, அங்கிருந்து கொழும்பு சென்று , இறுதிப்போர் முடியும் வரை புலிகளுக்கு ஆதரவான கருத்துக்களை வெளியிட்டவர். புலிகளின் வீழ்ச்சிக்கு பின்னர் ஆள் தலைகீழாக மாறி மஹிந்த புராணமும், டக்ளஸ் புராணமும் பாடத்தொடங்கிவிட்டார். காலப்போக்கில் டக்ளஸின் ஊடக ஆலோகராக உயர்ந்தார்.

டக்ளஸுக்கு கண்ணிலும் காட்டக்கூடாத உதயனுக்கு எதிராக அல்லும் பகலும் அனவரதமும் குரைப்பதற்கு பரிசாக றுஷாங்கனுக்கு மாகாணசபையில் நிற்க இடம் வழங்கப்பட்டது.

இதற்குப் பிரதியுபகாரமாக ஏதாவது செய்யவேண்டுமென்று கைகள் பரபரத்துக் கொண்டிருந்த றுஷாங்கனிடம் போலி உதயன் ஒன்றை தயாரிக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. 'எழிலன் விடுவிக்கப்பட்டதால் அரசுப்பக்கம் அனந்தி தாவினார்' என்றும் , தேர்தலில் இருந்து கூட்டமைப்பு ஒதுங்கிக் கொண்டதாகவும் தலைப்பிடப்பட்டு , ஏறக்குறைய மேலோட்டமாகப் பார்த்தால் உதயன் போன்றே தோற்றமளிக்கக் கூடிய வகையில் போலி உதயன் அச்சிடப்பட்டு, அதிகாலையிலேயே எல்லாக் கடைகளுக்கும் விநியோகிக்கப்பட்டது. காலையில் உண்மையான உதயனுக்குப் பதிலாக எல்லோர் கைகளிலும் போலி உதயன் கிடைக்க, 'இந்தச் செய்தி உண்மைதானோ?' என்று மக்கள் கொஞ்சம் குழம்பவே செய்தனர். ஆயினும் அதற்கிடையில் உண்மையான உதயன் கடைகளுக்கு வர அவர்களின் குழப்பம் தீர்ந்தது. என்றாலும் அன்றைக்கு தேர்தல் நாளென்பதால் இந்தக் கதை பரவலாக யாழ்ப்பாணத்தில் அடிபட்டாலும், மக்களுக்கு அரசின் சதியே இதுவென்பது நன்கு புரிந்திருந்தது. வாக்குகள் அரசுக்கு செருப்படியாக வீழ்ந்தன. அரசின் மும்மூர்த்தி வேட்பாளர்களும் முகம் குப்புற கவிழ்ந்தார்கள்.

(18ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்ப்பாணம் மாவட்டம்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| இலங்கை தமிழரசு கட்சி | 213907 | 85.25% | 14 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 35995 | 14.34% | 02 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 855 | 0.34% | 00 |
| ஜனநாயக கட்சி | 111 | 0.04% | 00 |
| மக்கள் விடுதலை முன்னணி | 56 | 0.02% | 00 |
| செல்லுபடியான வாக்குகள் | 253542 | 92.59% | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 20279 | 7.41% | |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 273821 | 64.15% | |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 426813 | | |

### கிளிநொச்சி மாவட்டம்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| இலங்கை தமிழரசு கட்சி | 37079 | 82.29% | 03 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 7897 | 17.53% | 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 61 | 0.14% | 00 |
| மக்கள் விடுதலை முன்னணி | 18 | 0.04% | 00 |
| ஜனநாயக கட்சி | 4 | 0.01% | 00 |
| செல்லுபடியான வாக்குகள் | 45459 | 90.57% | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4735 | 9.43% | |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 50194 | 73.17% | |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 68600 | | |

### மன்னார் மாவட்டம்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| இலங்கை தமிழரசு கட்சி | 33118 | 62.51% | 03 |
| ஐ. ம. சு. கூட்டமைப்பு | 15104 | 28.51% | 01 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 4571 | 8.63% | 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 187 | 0.35% | 00 |
| செல்லுபடியான வாக்குகள் | 53226 | 94.68% | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2989 | 5.32% | |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 56215 | 74.22% | |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 75737 | | |

### முல்லைத்தீவு மாவட்டம்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| இலங்கை தமிழரசு கட்சி | 28266 | 78.8% | 04 |
| ஐ.ம.சு.கூட்டமைப்பு | 7209 | 20.1% | 01 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 199 | 0.55% | 00 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 197 | 0.55% | 00 |
| செல்லுபடியான வாக்குகள் | 35982 | 92.73% | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2820 | 7.27% | |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 38802 | 72.28% | |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 53683 | | |

### வவுனியா மாவட்டம்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 41225 | 66.10 % | 04 |
| ஐ.ம.சு.கூட்டமைப்பு | 16633 | 26.67 % | 02 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1991 | 3.19 % | |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1769 | 2.84 % | |
| மக்கள் விடுதலை முன்னணி | 173 | 0.28 % | |
| செல்லுபடியான வாக்குகள் | 62365 | | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4441 | | |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 66781 | | |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 94644 | | |

**பேராசிரியர் போல் நியுமன் அவர்களே உங்களைப்பற்றிய ஒரு அறிமுகம்?**

நான் ஒரு தமிழன். பெங்களுரில் கற்பித்துக்கொண்டிருக்கின்றேன். ஈழத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மனித வுரிமை பாதிப்புக்கள் பற்றி ஆய்வுகள் செய்துகொண்டிருக்கின்றேன்.

**உங்கள் பயணநோக்கம் பற்றி...**

மாமனிதர் எலியேசர் நினைவாக மெல்பேணில் ஈழத் தமிழ்ச்சங்கத்தால் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் பங்குகொள்வதற்காகவே அவுஸ்திரேலியா வந்திருக்கின்றேன். இவ்வாறு பயணத்தை மேற்கொள்ளும்போது அதனை மேலும் பிரயோசனப்படுத்திக்கொள்ளும்முகமாக பல்வேறுபட்ட கலந்துரையாடல்களில் மெல்பேணிலும் சிட்னியிலும் பங்குகொண்டுவருகின்றேன். பல்வேறு ஊடகங்கள் ஊடா கவும் எனது கருத்துக்களையும் சிந்தனைகளையும் பதிவுசெய்துவருகின்றேன்.

**பல்வேறு தமிழர் அமைப்புக்கள் ஈழத்தமிழர் உரிமைகள் தொடர்பான வேலைத்திட்டங்களில் ஈடுபட்டாலும் அனைவரும் குறைந்தபட்ச பொதுவான கோரிக்கைகளை முன்வைத்து ஒரேகுரலில் இணைந்துசெயற்படவேண்டும் என கூறிவருகின்றீர்கள். அதுபற்றிய விளக்கம்....**

அண்மையில் தமிழ்நாட்டில் நடைபெற்ற மாணவர் எழுச்சிப்போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோது பத்து கோரிக்கைகளை முன்வைத்தார்கள். அவற்றிலே பிரதானமான பொதுவான கோரிக்கைகளாக சர்வதேச போர்க்குற்ற விசாரணை மற்றும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை என்ற விடயங்களை பார்க்கின்றேன்.

அனைத்து அமைப்புக்களுமே அங்கு நடைபெற்றது உதவித்திட்டத்தில் பல வீடுகளை கட்டுவதற்காக அங்கு சென்றிருந்தேன். தனியான நாடு போன்று விடுதலைப்புலிகள் நிர்வாகம் இருந்தது.

அங்கு உணவுத்தட்டுப்பாடு இருந்தது. ஆனல் சுதந்திரம் இருந்தது. இராணுவ கட்டுப்பாட்டுப்பகுதியில் உணவு இருந்தது. ஆனால் அங்கு தடைமுகாம்களும் சோதனைச்சாவடிகளும் இருந்தன.

அங்கு கல்விக்கு கூடுதல் முக்கியத் துவம் கொடுக்கப்பட்டது. வகுப்பறைகள் கூட இருக்காது ஆனால் கரும் பலகையும் கொட்டகையும் மட்டுமே இருக்கும். நோட்டுப்புத்தகம் இல்லாதபோதும் வருடம் முழுவதும் பென்சிலால் எழுதிவிட்டு வருடமுடிவில் அதை றப்பர் கொண்டு அழித்துவிட்டு அடுத்தவருடமும் அதை பயன் படுத்துவார்கள்.



**ஈழத்தில் தொடரும் இன அடக்குமுறையால் உலகம் எங்கும் அடைக்கலம் தேடியோடும் எம் உறவுகள் தமிழ்நாட்டிலும் பெருமளவில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களைப்பற்றியும் அவர் களது எதிர்காலம் பற்றியும் உங்களின் கருத்து என்ன?**

1983 இலிருந்து தமிழ்கநாட்டிற்கு ஈழத்தமிழர்கள் அகதிகளாக வந்துகொண்டிருக்கின்றார்கள். இப்போது

# தனி நாடு கோரும் உரிமை

# ஈழத்தமிழருக்கு உண்டு





**பேராசிரியர் போல் நியுமன் ஈழமுரசுக்கு விசேட பேட்டி**

போர்க்குற்றம் என்பதையும் அதற்கு சர்வதேச விசாரணை தேவை என்பதையும் ஏற்றுக்கொள்வார்கள். மற்றையது ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுயநிர்ணய உரிமை ஈழத்தமிழர்களுக்கு உண்டு என்பதாகும்.

ஈழத்தமிழர்கள் ஒரே நாட்டுக்குள் சிங்களவர்களுடன் இணைந்து வாழப்போகின்றார்களா அல்லது ஒரு நாட்டுக்குள் இரண்டு தேசங்களாக இணைந்து வாழப்போகின்றார்களா அல்லது தனிநாடாக வாழப்போகின்றார்களா என்பதை தீர்மானிக்கும் அடிப்படை உரிமை அவர்களுக்கு உண்டு.

ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்களும் ஒரேகுரலில் இந்த இரண்டு கோரிக்கைகளையும் ஒருமித்து முன்வைத்தால் அது மிகவும் பலமானதாக இருக்கும்.

2009க்குப் பின்னரான சூழ்நிலையில் தமிழர்கள் தமக்கான உச்சமட்ட தீர்வினை வலியுறுத்துவதில் இருக்கின்ற நடைமுறைச் சாத்தியப்பாடுகளை சிந்திக்கும்பொழுது இவ்வாறு அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கோரிக்கைகளை முன்வைத்தல் நல்லது.

ஒவ்வொரு அமைப்புக்களும் தத்தமது இலக்குகளையும் கொள்கைகளையும் முன்வைத்து செயற்படும் அதேநேரத்தில் இவ்வாறான பொதுவேலைத்திட்டங்களில் இணைந்து செயற்படுவதில் எந்தப்பிரச்சனைகளும் இருக்கமாட்டாது.

**நீங்கள் வன்னிப்பகுதிக்கு பலதடவை பயணம் செய்திருக்கின்றீர்கள். அதுபற்றி?**

நான் போரிற்கு முன்னரும் பல தடவை போயிருக்கின்றேன் அதன் பின்னரும் போயிருக்கின்றேன். சுனாமி

70000 பேர் அகதி முகாம்களிலும் 40000 பேர் தனியான வீடுகள் ஒழுங்குசெய்து வாழ்ந்துவருகின்றார்கள்.

அகதிமுகாமில் வாழ்பவர்களின் வாழ்க்கை மிகவும் கடினமானது. இதனை விட விடுதலைப்போராளிகளோடு தொடர்புடையவர்கள் எனகருதப்படுபவர்கள் சிறப்புமுகாம்களில் அடைக்கப்படுகின்றார்கள். அங்கு இதனிலும் கூடுதலான நெருக்கடிகள் உண்டு.

இவர்கள் ஏன் தமிழ்நாட்டிற்கு வந்தார்கள்? நான்குபேர் பயணம் செய்யக்கூடிய படகுகளில் 30 - 40 பேர் என வந்திருக்கின்றார்கள். அவ்வாறு வந்த படகுகள் கடலில் மூழ்கி பலர் இறந்திருக்கின்றார்கள். ஏன் அவ்வாறு கடினமான பயணம் செய்து தமிழ்நாட்டிற்கு வந்தார்கள்.

அவ்வாறு பாதுகாப்புதேடி வந்தவர்கள் அனைவரும் தங்கள் பிள்ளைகளின் கல்விஆவணங்களை கொண்டுவந்திருப்பார்கள். அங்கு அவர்களை கல்வி கற்பிக்கவிரும்புகின்றார்கள். ஆனால் ஈழத்தமிழ் அகதிகளுக்கு தமிழ்நாட்டு அரசு ஆண்டு 12 இற்கு மேல் இலவச கல்வி வாய்ப்பை வழங்குவதில்லை.

சிறிய இடங்களில் நெருக்கடியாக வாழும் இம்மக்கள் மத்தியில் சமூகபிரச்சனைகள் ஏற்படுகின்றன. நன்றாக கல்வி கற்று வளரக்கூடிய பிள்ளைகள் எதிர்கால கல்விவாய்ப்பு இல்லாமல் தமது எதிர்காலத்தை தொலைத்துவிடுகின்ற கவலை யான சம்பவங்கள் நடைபெறுகின்றன.

**ஈழத்தமிழர்கள் மத்தியில் காணப்படும் பல்வேறு அமைப்புக்கள் பற்றி?**

நான் ஈழத்திலுள்ள அமைப்புகளுடனும் சரி, புலத்து அமைப்புக்களுடனும் சரி, பல்வேறு அமைப்புக்களுடனும் தொடர்புகளை பேணிவருகின்றேன்.

வெளிநாடுகளில் நாடுகடந்த தமிழீழ அரசு செய்யவேண்டிய பணிகள் உள்ளன. ஒரு அமைப்பு செய்கின்ற பணிகளை இன்னொரு அமைப்பு செய்யாமல், செய்கின்ற அமைப்பை பலப்படுத்துவதுடன் மற்றைய அமைப்பு செய்யாமல் அல்லது செய்யமுடியாமல் இருக்கின்ற பணிகளை, செய்வதே பொருத்தமாக இருக்கும்.

எந்த தமிழ் அமைப்பாயினும் அவர்கள் தமிழர்களுக்கு உண்மையாக வேலை செய்தால் அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அவர்களோடு இணைந்து நில்லுங்கள் என்பதே எனது கருத்தாகும்.

**குறிப்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னனியும் கொள்கை ரீதியாக முரண்பட்டு இருப்பதை பார்க்கலாம். இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

எங்களுடைய வரலாற்றை பார்த்தால் 65 வருடங்களாக தமிழர்களின் தீர்வுக்காக முயற்சித்திருக்கின்றோம். கூட்டமைப்பை பொறுத்தவரை படிப்படியாக தமிழர்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வோம் என்கின்றார்கள்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இளையவர். எமது தீர்வை தெளிவாக முன்வைக்கவேண்டும் எனச்சொல்கின்றார். “ஒரு நாட்டில் இரண்டு தேசங்கள்” என்ற கொள்கையை முன்வைத்து வேலை செய்கின்றார்கள். எமது போராட்டத்தை அடுத்தகட்டத்திற்கு நகர்த்தக்கூடிய இளையவர்கள் வேண்டும். அந்தவகையில் அவர்களுக்கு ஆதரவளிக்கவேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. (18ஆம் பக்கம் பார்க்க)

# மன்றம் வந்துள்ள புதிய மந்திரிகள்



**Warren Truss**
**Deputy PM, Infrastructure and Regional Development**

Nationals leaders has represented the seat of Wide Bay in southern Queensland since 1990.
Is known for being quietly spoken and shunning the limelight.
Was Minister for Trade in the Howard Government.



**Julie Bishop**
**Foreign Affairs**

WA-based MP for Curtin is the Deputy Liberal Party Leader.
Was Minister for Education, Science and Training and Minister Assisting the Prime Minister on Women's Issues in the Howard Government.



**Eric Abetz**
**Employment, Assisting the PM on the Public Service**

The Liberal Senator for Tasmania serves as the Coalition's Leader in the Senate.
Held a number of ministries in the Howard Government.
Was a lawyer before becoming a politician and was born in Germany.



**George Brandis**
**Attorney-General, Arts**

Was elected as a Senator for Queensland in 2002.
Served as Minister for Arts and Sport in the Howard Government.



**Joe Hockey - Treasurer**

Has been the member for North Sydney since 1996.
Held a number of Ministries in the Howard Government.
His father was born in Bethlehem of Armenian and Palestinian parentage.



**Barnaby Joyce**
**Agriculture**

Deputy leader of the Nationals.
Has successfully moved from the Senate to win the seat of New England in NSW, vacated by Independent Tony Windsor.
Ran his own accountancy firm in the western Queensland town of St George for a decade.



**Tony Abbott - Prime Minister**
Has led the Coalition since 1 December 2009.
Was a senior member of the Howard Government.
Has been member for Warringah, on Sydney's North Shore, ince 1994.



**Christopher Pyne**
**Education**

Has been the member for Sturt in South Australia for two decades, having been elected as a 25-year-old.
Served as Minister for Ageing in the closing stages of the Howard Government.
Has four children and is an AFL fan.



**Nigel Scullion**
**Indigenous Affairs**

NT Senator was the Minister for Community Services in the Howard Government.
Was born in England, spent time in Malaysia and Africa but moved to the NT in 1985.
Was deputy leader of Nationals in previous parliament.



**Ian Macfarlane**
**Industry**

Has held the seat of Groom, in southern Queensland, since 1998.
Served as a minister in the Howard Government.



**Kevin Andrews**
**Social Services**

Has been the member for Menzies in Victoria in 1991.
Held a number of ministries in the Howard Government.
Has five children and describes himself as an avid cyclist.



**Malcolm Turnbull**
**Communications**

Has been the member for Wentworth since 2004.
Was deposed as Liberal Leader by Tony Abbott by a single vote in 2009.
Had a successful life before entering politics, working as a journalist and a lawyer before becoming a businessman.



**Peter Dutton**
**Health, Sport**

Became the member for Dickson in Brisbane's north in 2001, defeating Cheryl Kernot.
Served as Minister for Revenue and Assistant Treasurer in the Howard Government.
Was a police officer before entering parliament and is the father to three young children.



**Bruce Billson**
**Small Business**

Became the member for Dunkley in Victoria in 1996.
Served in Defence portfolios in the Howard Government.



**Andrew Robb**
**Trade, Investment**

First elected to Goldstein in 2004.
Federal director of the Liberal Party from 1990 to 1997.
Former jobs include animal health officer and executive director of the National Farmers' Federation.



**David Johnston**
**Defence**

Was elected as a Senator for WA in 2001.
Was Minister for Justice and Customs in the final year of the Howard Government.
Is a former lawyer, has worked in both Perth and Kalgoorlie and is a West Coast Eagles AFL fan.



**Greg Hunt**
**Environment**

Has been the member for Flinders in Victoria since 2001.
His father, Alan, was a state politician for more than 30 years.
Is a keen sportsman who runs marathons, and enjoys ocean swimming.



**Scott Morrison**
**Immigration and Border Protection**

Was the MD of Tourism Australia before becoming the MP for Cook, in NSW, in 2007.
Has had a high-profile during the Coalition's time in Opposition as the spokesman on immigration.



**Mathias Cormann**
**Finance**

Was first elected as Senator for WA in 2007.
Was born in Belgium but migrated to Australia in the 1990s.
Is a qualified pilot.

# iPhone திருவிழா

ஐபோன் பாவனையாளர்களுக்கு இது திருவிழாக்காலம். இம்முறை அடுக்கடுக்காக மூன்று இன்ப அதிர்ச்சிகளை அள்ளிக்கொடுத்துள்ள அப்பிள், தனது பாவனையாளர்களை மீண்டும் மீண்டும் தன் மீதானத்தின் போதையின் பாதையில் இறுக்கி பிடித்திருக்கிறது.

ஆறு வருடங்களுக்கு முன்னர் தனது முதலாவது ரக ஐபோ னை அறிமுகப்படுத்தி பயனாளர்களை தன்னுள்ளே ஆழமாக ஈர்த்துக்கொண்ட அப்பிள் நிறுவனம் இன்றும் தனது தரம் மாறாத எந்த புதிய படைப்பை சந்தையில் அள்ளி வீசி-னாலும் மகுடிக்கு மயங்கும் பாம்புகள் போல அப்பிளின் காலடியில் வீழ்ந்துவடுகிறார்கள் அதன் வாடிக்கையாளர்கள். அதற்கு தகுந்தாற்போல், அப்பிள் நிறுவனமும் அதன் தரம் மாறாத படைப்புக்களை புதிய தொழில்நுட்பத்தின் பாய்ச்சல்களாக உலகின் மூலை முடுக்கெங்கும் கொண்டுசென்று கொண்டிருக்கிறது.

இன்றைய நாளில், புதிய தொழில்நுட்பத்தின் பரம்பல் எனப்படுவது பாமர மக்களுக்கும் அதிவேகமாக சென்று சேர்வதற்கு ஒரு ஊடாகம் இருக்கிறதென்றால் அது கைத் தொலைபேசியே ஆகும். வுானொலி, தொலைக்காட்சி ஆகியவை தமது ஆரம்ப காலங்களில் கண்ட வளர்ச்சிவேகம் ஒரு காலகட்டத்தின் பின்னர் நகரவேயில்லை எனலாம். ஆந்த வெற்றிடத்தை கைப்பற்றி இன்றுவரை அதிவேகமாக மக்களின் மத்தியில் ஒரு வித போதையாக ஊடுருவியிருப்பது கைத்தொலைபேசி ஆகும்.

அந்த அதிவேக வளர்ச்சியில் அப்பிள் படைத்திருக்கும் சாதனை என்பது பிரம்மண்டமானதும் பிரம்மிக்கவைப்பதும் ஆகும்.

ஐபோன் என்று ஆரம்பித்து அதில் ஐபோன்-3G (July 11, 2008), ஐபோன்-3GS (June 19, 2009), ஐபோன்- 4 (June 24, 2010), ஐபோன் - 4S (October 14, 2011), ஐபோன் -5 (September 21, 2012) என்று நகர்ந்து வளர்ந்து கடந்த செப்டெம்பர் 20 ஆம் திகதி ஐபோன் 5C and 5S என்று ஒரே நேரத்தில் இரண்டு கைத்தொலைபேசிகளை அறிமுகம் செய்திருக்கிறது.

இதேவேளை, இந்த அறிமுக நாளுக்கு இரண்டு நாட்கள் முன்னதான தனது ஐபோன்களில் இயங்கும் பிரத்தியேக இயங்கு மென்பொருளான iOS7 என்பதை வெளியீடு செய்து தனது வாடிக்கையாளர்களை மேலும் ஒரு இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த தடவை ஐபோன்5 வெளியிட்ட முதல் வாரத்தில் 50 லட்சம் தொலைபேசிகள் விற்பனையாகியதை அடுத்து, இம்முறை ஐபோன் 5C and 5S ஆகியவை சுமார் 60 லட்சம் தொலை பேசிகள் விற்பனையாகும் என்று அப்பிள் நிறுவனம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

தனது புதிய ஐபோன் 5C and 5S ஆகியவற்றை சுமார் 11 நாடுகளில் விற்பனைக்கு விடுத்துள்ள அப்பிள் நிறுவனம், இம்முறையும் தனது வெளியீடு சாதனை படைக்கும் என்று தெரிவித்துள்ளது.

இப்போது, புதிய ஐபோன் 5C and 5S குறித்த தகவல்களை பார்ப்போம்.

அப்பிள் பொருட்களின் மீது அதன் பாவனையாளர்கள் கொண்டுள்ள போதை, அந்த நிறுவனம் எதை வெளியிட்டாலும் வாங்கிக்கொள்ளும் ஒருவித இனம்புரியாத மாயவலையை விரித்துவைத்துள்ளபோதும், தற்போது வெளியாகியுள்ளள ஐபோன் 5C and 5S ஆகியவற்றில் அப்பிள் நிறுவனம் தொழில்நுட்ப ரீதியாக - எதிர்பார்த்தளவு - பாரியளவில் எந்த மாற்றத்தையும் கொண்டுவரவில்லை என்பதே பொதுவான விமர்சனமாக வெளிவந்துள்ளது.

இதற்கு முன்னர் வெளியான ஐபோன் 5 உடன் ஒப்பிடுகையில் விரல் ரேகை மூலம் தொலைபேசியினுள் நுழைவதை அறிமுகப்படுத்தியுள்ளமை, முன்னையை தொலைபேசியை விட இரண்டு மடங்கு வேகமாக தொழிற்படும் செயலியை (Processor) அறிமுகப்படுத்தியுள்ளமை போன்ற மாற்றங்களுடன் எல்லா தொலைபேசிகளுக்கும் இலவசமாக Upgrade செய்யப்பட்ட iOS7 இயங்குமென்பொருள் ஆகியவை அடங்கிய சாதாரண வெளியீடாக மட்டுமே இம்முறை அப்பிளின் படைப்பு அமைந்துள்ளதாக விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.



இதற்கு அவர்கள் தெரிவித்துள்ள மிகமுக்கிய ஆதாரம் யாதெனில், இவ்வாறான மாற்றங்களுடன் வெளிவந்துள்ள புதிய ஐபோன் உண்மையில் தொழில்நுட்ப வளர்ச்சியின் பாதையில் மிகப்பெரிய சாதனையென்றாலும், அதற்கு அப்பிள் நிர்ணயித்திருக்கும் விலை மிகவும் அதிகம் என்பதாகும்.

ஆஸ்திரேலியாவில் ஐபோன் 5S இன் விலை $869 இலிருந்தும் ஐபோன் 5C இன் விலை $739 இலிருந்தும் ஆரம்பிக்கிறது. இந்தவிலைகள், அமெரிக்காவில் விற்கப்படும் ஐபோன் 5C and 5S விலைகளிலும்விட 14 சதவிதம் அதிகம் வேறு.

இந்த விதத்தில் பார்க்கையில், ஐபோன் 5C and 5S இன் வெளியீடு எவ்வளவுதூரம் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தியுள்ளது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இதேவேளை, அப்பிள் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள விரல்ரேகையை கடவுக்குறியாகக்கொண்டு தொலைபேசியினுள் நுழையும் தொழில்நுட்பம், தொலைபேசிய வெளியாகி ஓரிரு நாட்களிலேயே சர்ச்சையை கிளப்பியுள்ளது. உலகிலுள்ள அனைவரது விரல்ரேகையும் ஒருவரை ஒருவர் ஒத்ததாக இல்லை என்ற வித்தியாசம், குற்றச்செயல்களை செய்தவர்களை கண்டுபிடிப்பதற்கான பிரதான தடயமாக உலகளாவிய ரீதியில் இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இதுஇவ்வாறிருக்கையில், அப்பிள் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களின் விரல்ரேகைகளை தனது தொழில்நுட்பபொருளொன்றில் சேக ரிப்பது எவ்வளவு தூரம் பாதுகாப்பான செயன்முறை என்றும் இந்த தடயக்குறிகள் பாதுகாப்பாக சேமிக்கப்படுவதற்கும் அவை தொழில்நுட்ப திருடர்களால் திருடப்பட்டு இணையக்கொள்ளையார்களால் பாரதூரமான குற்றச்செயல்களுக்கு பயன்படுத்தப்படாமலிருப்பதற்கு அப்பிள் நிறுவனம் என்ன வகையான - உத்தரவாதம் மிக்க - பாது காப்பு பொறிமுறையை கொண்டுள்ளது என்றும் அமெரிக்க செனட் உறுப்பினர் அப்பிள் நிறுவனத்துக்கு கடிதம் அனுப்பி யுள்ளார். தனது கடிதத்துக்கு ஒரு மாத காலத்தில் பதிலை எதிர்ப்பார்ப்பதாக அப்பிள் நிறுவனத்தை கோரியுள்ளார்.

இது ஒருபுறமிருக்க, கடந்த 18 ஆம் திகதி அப்பிள் வெளியிட்டுள்ள iOS7 எனப்படும் ஐபோனுக்கான பிரத்தியேக இயங்கு மென் பொருள், ஐபோன் திருடர்களிமிருந்து தமது தொலைபேசிகளை காப்பாற்றக்கூடியவாறு இதுவரை காலமும் இருந்த வசதியை இல்லாமற் செய்துள்ளதாக தொழில்நுட்ப வல்லுனர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மொத்தத்தில், சர்ச்சைகளின் வடிவமாக அப்பிளின் படைப்பு இம்முறை பிரசவிக்கப்பட்டிருந்தாலும் வாடிக்கையா ளர்களின் செல்லக்குழந் தையாகவே தொடர்ந்தும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. கடைகளில் விற்பனை தொடர்ச் சியாக லட்சங்களை தாண்டிக்கொண்டிருக்க, மறுபுறம் இணைய வழியாக கொள்முதல் செய்யும் வாடிக்கையாளர்கள் தங்களது விருப்பத்துக்குரிய நிறங்களில் ஐபோன்களை கொள்முதல் செய்துவிட்டு பொறுமையுடன் காத்திருக்கிறார்கள்.

அமெரிக்காவில் வீடில்லாமல் தெருக்களில் வசிப்பவர்களை கடந்த 20 ஆம் திகதிக்கு முன்னர் அப்பிள் தொலைபேசி விற்கும் கடைகளுக்கு முன்பாக வரிசையில் நிற்பதற்காக, சில அப்பிள் வாடிக்கையாளர்கள் வாடகைக்கு அமர்த்திவிட்டு பின்னர் அவர்களுக்கு பணம் கொடுக்காததால் பெரும் கைகலப்புக்கள் இடம்பெற்று, காவல்துறைதான் நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

அப்பிளின் வெளியீடுகள் அதன் வாடிக்கையாளர்கள் எப்பெடியல்லாம் தொழில்நுட்ப போதை பீடித்த பித்தர்களாக்கி விட்டது என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.



# பார்த்தீபன் இன்னும் பசியோடுதான் இருக்கிறான்

ஈழக்காப்பியன்



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தனக்கென ஒரு தனி முத்திரையைப் பதித்தவன் திலீபன். திலீபன் என்றால் தியாகம் எனத் தமிழுக்கு ஒரு புதிய அர்த்தத்தை உருவாக்கியவன்.

ஒரு நாளல்ல இது நாட்களல்ல பன்னிரு நாட்கள் நீர் கூட அருந்தாமல் அவன் மேற்கொண்ட உண்ணாநோன்பு மாபெரும் சக்தியாகத் திரண்டு மேலெழுந்தது. ஒவ்வொரு தமிழனின் நெஞ்சிலும் உணர்த்தும் தீயாய்க் கொழுந்து விட்டெரிந்தது. ஒரு பிராந்திய வல்லரசின் முகமூடியைக் கிழித்து அம்பலத்தில் நிறுத்தியது!

திலீபன் ஒரு ஆயுதப் போராளி! தமி ழீழ விடுதலைக்காக ஆயுதமேந்திக் களமாடியவன் எத்தனையோ தடவைகள் சிங்கள ஒடுக்குமுறை இராணுவத்துடன் மோதிக்களம் கண்டவன். முன்னேறி வந்த இராணுவத்தை வல்லவை வெளியில் தடுத்து நிறுத்திச் சமராடி விழுப்புண் அடைந்தவன். போர்க்களம் அவனுக்கு ஒரு விளையாட்டுத்திடல், எதிரிகளைப் பந்தாடுவது அவனால் அடிக்கடி எட்டப்படும் இலக்கு.

எனினும் -

அவன் நல்லூர் வீதியில் இந்திய வல்லரசுடன் அஹிம்சைப் போர் தொடுத்தான். காந்தீய தேசத்துடன் காந்தீய வழியிலேயே சமராடினான்.

ஒப்பரேசன் லிபரேசன் இராணுவ நடவடிக்கை மூலம் வட மராட்சியை நோக்கி நர-பலி வேட்டையை நடத்தியவாறு முன்னேறிய சிங்களப் படை யினரை விடுதலைப்புலிகள் பல்வேறு முனைகளில் தடுத்து நிறுத்திப் போராடினர். கிடுகு வேலிகளும் பனை வடலிகளும் கூட ரவைகளை உமிழ்ந்து சிங்களச் சிப்பாய்களின் உயிர்களைக் குடித்தன. 'அவ்ரோ' விமானங்கள் பொழிந்த குண்டு மழை-யின் நடுவில் நின்று, எறிகணைச் சிதறல்களிடையே புகுந்து விடுதலைப் புலிகள் வீர சாதனை படைத்தனர்.

அங்குலமங்குலமாகப் பேரிழப்புக்களுடன் முன்னேறிய இராணுவம் நெல்லியடி மத்திய கல்லூரியில் மேலும் முன்னேற முடியாது நிலைகொண்டபோது 'மில்லரின்' கரும்புலித் தாக்குதல் இலங்கைப் படையை ஈடாட வைத்தது. மன வலிமையை முற்றிலும் இழந்து தடுமாறியது இலங்கை இராணுவம்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஓடிப்போய் இந்தியாவின் காலில் விழுந்தார். இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது. தமிழ் மக்களைப் பாதுகாப்பது என்ற பேரில் எமது தாயக மண்ணில் கால் பதித்தது இந்திய அமைதிப்படை!

விடுதலைப் போராளிகளின் ஆயுதங்களைக் களைவது முதல் சிங்களக் குடியேற்றங்கள் வரை இலங்கை அரசின் நோக்கங்களை நிறைவேற்றும் ஆயுதமாகச் செயற்பட்டது இந்திய அமைதிப்படை. தமிழ் மக்களைப் பாதுகாக்க வந்ததாகக் கூறிய இந்தியப் படை தன் நடவடிக்கைகளை தமிழர்களுக்கு எதிரா-கவே திருப்பியது.

தமிழ் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தோளில் சுமந்த விடுதலைப் புலிகள் இந்தச் சதியை அம்பலப்படுத்த வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டனர். இந்தியாவுடன் அஹிம்சைப் போர் தொடுப்பதாக முடிவெடுத்தனர் விடுதலைப்புலிகள்.

நல்லூர் வீதியில் அமைக்கப்பட்ட மேடையில் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து, அன்னையொருத்தி பொட்டுவைத்து ஆசீர்வதித்த திலீபன். உண்ணாவிரதப் போரைப் பிர-கடனம் செய்தான்.

தமிழீழமே நல்லூர் வீதியில் திரண்டது. அலை மோதும் மக்கள் வெள்ளத்தின் உணர்வெழுச்சி வீசும் காற்றையே அதிரவைக்கப் போர் தொடர்ந்தது. உணவு மட்டுமல்ல நீர் கூட அருந்தாத வீரப் போர் அது!

நாட்கள் நகர நகர திலீபனின் உடல் சோர்கிறது உள்ள உறுதி மட்டும் மலையென உயர்கிறது.

மூன்றாம் நாள் - உடல் வாடிய நிலையிலும் அவன் குரல் உயர்கிறது!

வீரத்தினதும் தியாகத்தினதும் வெளிப்பாடாக அவனின் உரை முழங்குகிறது! எமது மக்கள் மீதும் விடுதலைப் புலிகள் மேலும் அவன் கொண்ட நம்பிக்கை வார்த்தைகளாக வெடிக்கிறது!

"மலரப் போகும் தமிழீழத்தை நான் வானிலிருந்து பார்ப்பேன்"

அந்த வார்த்தைகள் விண்ணில் பரவி 26 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் அவை தமிழ் மக்களின் நெஞ்சங்களில் எதிரொலிக்கின்றன.

திலீபனும் விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்த பல்லாயிரக்கணக்கான மாவீரர்களும் மலரப் போகும் தமிழீழத்திற்காக வான மண்டலத்தில் நட்சத்திரங்களாக மாறி காத்துக்கிடக்கிறார்கள். அவர்களின் அந்த ஒப்பற்ற நம்பிக்கை ஒவ்வொரு தமிழனின் குருதியிலும் கலந்து ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த நாட்களை எதிர்பார்த்து குமுறிக் கொண்டிருக்கிறது.

திலீபனின் உண்ணா நோன்பை இடை நிறுத்த எத்தனோ மருட்டல்கள்! எத்த னையோ மிரட்டல்கள்! எத்தனையோ தாளங் கள்.

எவற்றாலும் அந்தப் புலி வீரனின் உறுதியை அசைக்க முடியவில்லை!

நாட்கள் நகர்ந்தன!

ஐந்தம்சக் கோரிக்கைகளை நிறைவேற்ற இந்தியா ஒப்புக்கொள்ளவில்லை!

இது தனது வல்லாதிக்க நோக்கத்தை தானே அம்பலப்படுத்துகிறது.

பன்னிரண்டாம் நாள்!

நல்லூர் வீதியில் திரண்டிருந்த மக்கள் வெள்ளம் கதறியழ ஒரு தியாக வேள்வி நிறைவு பெறுகிறது! திலீப னின் உயிர் மெல்ல மெல்ல மேலெழுந்து காற்றில் கலந்து விண்ணில் பரவுகிறது! ஆதவன் சிவந்து தன் அஞ்சலியைச் செலுத்தினான்! காற்று கதறித் தன் கவலையை வெளிப்படுத்தியது! வானம் அழுது கண்ணீர் விட்டது!

உலகமே அழுதது!

அது மட்டுமல்ல! சிங்களப் பேரினவாதத்தினதும் இந்தியப் பிராந்திய மேலாதிக்கத்தினதும் உண்மை முகங்களை உலகம் கண்டு கொண்டது.

திலீபனின் தியாக வேள்வி நிறைவடைந்து 26 ஆண்டுகள் கடந்துவிட்டன! ஆனால் அதன் மகத்துவம் இன்னும் பேரொளியாக ஒளிர்ந்துகொண்டிருக்கிறது! உணர்வலைகளாக ஓங்கி அடிக்கிறது! எமது ஆயுதப்போர் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டது உண்மை! ஆனால் எமது போராட்டத்தை எவரும் தோற்கடிக்க முடியாது. எமது இலட்சியம் நிறைவேறும் வரை என்றும் குன்றா இளமையுடன் அது வீறுநடைபோடுகிறது.

ஏனெனில் -

அது தியாகி திலீபனின் தியாகத்தால் புடம் போடப்பட்டது! எமது மாவீரர்களின் அர்ப்பணிப்பில் கொழுந்துவிட்டெரிவது! இன்று நாம் ஜனநாயக வழியில் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். திலீபன் ஆயுதப் போராட்டத்தின் ஒரு பகுதியாக அஹிம்சைப் போரைத் தொடுத்தான். இன்று நாம் ஆயுதப் போரின் அடுத்த கட்டமாக ஜனநாயகப் போரை தொடர்கிறோம்!

அதாவது எமது போராட்டம் விடுதலைப் புலிகளின் தலைமையில் நடத்திய ஆயுதப் போராட்டத்தின் இன்னொரு வடிவம்! போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் போராட்ட இலட்சியங்கள் மாறுவதில்லை.

தியாகி திலீபனும், எமது மாவீரர்களும், எமது மக்களும் எந்தப் புனிதமான இலட்சியத்துக்காகத் தமது உயிர்களை அர்ப்பணித்தனரோ அது ஈடேறும்வரை எமது போராட்டம் எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து முன் செல்லும்.

"போராடுவது தோல்வியடைவது, மீண்டும் போராடுவது மீண்டும் தோல்வியடைவது, மீண்டும் மீண்டும் போராடுவது மீண்டும் மீண்டும் தோல்வியடைவது இறுதி வெற்றி வரை - இது மக்களின் நியதி!

போராடுவது தோல்வியடைவது, மீண்டும் போராடுவது மீண்டும் தோல்வியடைவது, மீண்டும் மீண்டும் போராடுவது மீண்டும் தோல்வியடைவது, மீண்டும் மீண்டும் போராடுவது மீண்டும் மீண்டும் தோல்வியடைவது அவர்களின் சவக்குழி வரை - இது ஒடுக்குமுறையாளர்களின் நியதி."

- சீனத்தலைவர் மா ஓ சேதுங்












